பதினைப்பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பெற்றது.

# இந்துசாதனம்

SUPPLEMENT TO THE HINDU ORGAN.

விரோதி௵ (1889 ஆவணி௴ உதயமாயினது)

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

புத்தகம்—௪௭ } யாழ்ப்பாணம்:— யுவ௵ மாசி௴ ௧௫௨ ( 1936 பிப்ரவரி 27 ) வியாழக்கிழமை { இலக்கம்—அ௬

## ஸ்ரீ இராமக் கிருஷ்ண பரமஹம்சதேவர்

"பார்த்தவிடமெல்லாம்
பரவெளியாய்த் தோன்ற வொரு
வார்த்தை சொல்லவந்த
மனுவே பராபரமே"

திருவவதாரம்

18-2-1836



வண்பழித்திம் மண்புகுந்து
மனிதரையாட் கொண்டவள்ளல்
—திருவாசகம்

## நூற்றுண்டு நிறைவு விழா

"அன்பைப் பெருக்கியெம
தாருயிரைக் காக்கவந்த
இன்பப் பெருக்கே
இறையே பராபரமே"

நூற்றுண்டு நிறைவுவிழா

24-2-1936

ஸ்ரீமத் தாயுமான சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய இத் திருப்பாடற்கு ஒரு சிறந்த இலக்கியமாய் விளங்கும் "ஆநந்த வெள்ளம்" ஸ்ரீ ராமக்கிருஷ்ண பரமஹம்ச தேவரின் பிரதம சிஷ்யராகிய ஸ்ரீமத் விவேகாநந்த சுவாமிகள் பொழிந்த திருவசசகப் போறாகியஆநந்தவெள்ளமேயாம்.

இவ் வாநந்தப் பேராறு "ஊற்றெடுத்த திருமாமலை" தக்ஷிணேஸ்வரத்தில் எழுந்தருளியிருந்து சிஷ்யகோடிகளின் உள்ளள் நிறைந்து ததும்புமாறு ஞானப்பால் சொரிந்து நின்ற ஸ்ரீ ராமக்கிருஷ்ணபரமஹம்ச தேவரின் திருவுருவமாகும்.

"தேறித் தெளிந்து நிலைபெற்ற மாதவர்" ஆகிய ஸ்ரீ ராமக் கிருஷ்ணதேவர் 1836ம் ஆண்டு பெப்ருவரி மாதம் 18 ௳ தேதி கங்கைவளஞ் செறிதரப் பெற்ற வங்கவள நாட்டின்கண் உள்ள 'காமார்புகூர்' என்னுங் கிராமத்திலே திருவவதாரஞ் செய்தருளினர்.

இப்புண்ணியக் கன்றினைக் கருவுயிர்க்கும் பாக்கியம் பெற்றவர் க்ஷுதிராம் சட்டோபாத்தியாயர் என்னும் அந்தணர் திலகரின் திருமனைக் கிழத்தியாராகிய சந்திரமணி தேவியார் ஆவர்.

செம்மனச் செல்வியாராகிய இம்மாதாசியார் காமார்புகூரின் கண்ணுள்ள கண்ணுதற் பெருமான் திருக்கோவிற் சென்று இறைவனை இறைஞ்சி நின்ற ஞான்று சிவபெருமானின் திருவருட்சோதி அன்னையாரின் திருவுள்ளத்தை உறைவிடமாக்கொண்டது.

திருவருட் சோதியின் பேரொளியில் மயங்கி வீழ்ந்தெழுந்த தேவியார், இறைவன்றனை வான்பழித்து, இவ்வுலகத்து மக்களை ஆட் கொள்வான் வேண்டித் தன்னையே அன்னையாக் கொண்டனர் என்பதை உணர்ந்தார்.

தேவியார் சிவமணப்பேறு பெற்ற அந்நாளில் க்ஷுதிராம் சட்டோபாத்தியாயர் 'கயா' வென்னும் திருப்பதிக்கு யாத்திரை சென்றிருந்தார். சட்டோபாத்தியாயர் கயாவிற் றரிசனஞ் செய்து துயின்ற பொழுது திருமால் அவர்க்குக் கனவில் தோன்றி "உலகம் உய்வான்வேண்டி உன்புதல்வ னுவேன்" என்று திருவாய் மலர்ந்து மறைந்தருளினர்.

கதாதர மூர்த்தியின் திருவருள் பெற்ற சட்டோபாத்தியாயர் கயாவினின்றும் காமார்புகூர் மீண்டனர்; அவர் மீண்டபொழுது சந்திரமணி தேவியார்சிவபெருமானின் திருவருட்டிறத்தினைக் கூறக்கேட்டுக் கழிமகிழ் வெய்தினர். தேவியாரும் கதாதர மூர்த்தி கனவினிற் றிருவாய்மலர்ந்தருளிய நன்மொழிகேட்டு உவகை யுற்றனர். அப்பொழுது சட்டோபாத்தியாயர்க்கு வயசு அறுபது.

1836ம் ஆண்டு பெப்ருவரி மாதம் 18 ௳ தேதி சந்திரமணி தேவியார் ஓர் ஆண்மக

"ஆறெருத் திலங்கு சமயங்க ளாறுக்கு மாழ்கடலாய்
வீறிப் பரந்த பரமான ஆநந்த வெள்ளமொன்று
தேறித் தெளிந்து நிலைபெற்ற மாதவர் சித்தத்திலே
ஊறிப் பரந்தண்ட கோடியெல்லாநின்று லாவியதே"

—ஸ்ரீமத் தாயுமானசுவாமிகள்

1. இறையொளியும் இடமருங்கில் இலங்குதிரு மாலுருவும்
மறையவர்தம் மணிவிளக்காம் சந்த்ரமணி தேவிதிருப்
பொறைநிறைந்து பூதலந்திர் ஐம்பானுன் டகவையின்முன்
மறைமொழிய வந்துதித்த வள்ளல்கதா தரமூர்த்தி!

2. வாதவூர் மாமணியோ! மதங்கசூ ழாமணியோ!
கோதிலாச் சொற்கோவோ! கோமளத்தைக் கொளச்சிவனைத்
தூதுவிட்ட சுந்தரனே! தேவகிதன் றிருச் சுதனே!
போதிவேந் தோவறியேம் புண்ணியநின் றிருக்கோலம்.

3. அறத்தாற்று நெறிபிறழ்ந்து மறத்தாறு மலிந்திடுநாள்
சிறந்திடவே செகமெல்லாம் திருவவதா ரம்புரியென்
அறமறியென் றருச்சுனனுர்க் கன்றுகண் ணன் அருளியவத்
திறம்விளக்கச் செகத்துதித்த திருவடியோ நின்கோலம்.

4. அங்கிலமா மொழிபயின்றே அம்மொழிக்கண் செய்யரிபோற்
றங்குபொருள் கொள்ளாது தடுமாறிச் சருகரித்துச்
சங்கரனுர் நெறிமறந்து தாரணியோர் உழன்றிடுநாட்
சிங்கமென வந்த நரேந் திரனுநின் றிருக்கோலம்.

5. மன்னுசநா தநதரும மறைநான்கின் சிரப்பொருளும்
பன்னரிய புராணேதி காசமுறைப் பழம்பொருளும்
பொன்னமுலிற் படப்புடமாய்ப் பொலிவுற்ற தன்மையைப்போல்
நின்னுளத்திற் புடமாகி நிறைந்ததுவே நின்கோலம்.

### ஸ்ரீ ராமக்கிருஷ்ண பரமஹம்ச தேவர்

வெண்பா.

கங்கைச் சடையான் கழல் பணியுங் காலத்தே
வங்கக்கா மார்புகுர் வாழ்சுதிராம் — மங்கைமனை
சந்த்ரமணி தேவிக்குத் தங்கினரே சங்கரனுர்
சுந்தரஞ்சேர் சோதியதாய்ச் சென்று.

பதிற்றுப்புத் தாண்டின்முன் பார்காக்க வங்கச்
சுதிராம் சுதனெனவே தோன்றி — மதிபாய்
சடையான் மறை மொழிந்த சற்குருவே எல்லாம்
உடையாயென் னுள்ளத் துறை.

தத்தர் குலமணிக்கோர் சற்குருவாய் வந்துதித்தே
முத்திநெறி மொழிந்த மௌனியே — சுத்துகடல்
சூழுலகம் போற்றுஞ் சுடர்க்கொழுந்தே தொன்ஞானம்
வாழ்கிதியே வந்தாள் மகிழ்ந்து.

அகவற்பா.

உலகமுவப்ப உயர்நெறி காட்டிப்
பகைகதிர்பரப்பிய ஞானசூரியன்
அருளுருவாகிய அம்பிகை பங்கன்
திருவருளாலே திருவருள் கடந்து
குணபாற் பரிதி குடபால் கடந்தடைந்து. [தில்
ஆயிரத் தெண்ணூற்றுத் தெண்ணூற்றுமுன்

பணம்பொலி அமரியம் பழிகடப் போந்து
பாயிருள் போக்கும் படிவங் காட்டிப்
பண்மதக் குழுவிற் படரொளி பரப்பிச்
சநாதந தர்மத் தன்மையை விளக்கியோன்
தத்தர்குலத்துத தண்ணளி கழஞ்சியம்
வித்தகர் போற்றும் விவேகாநந்தன்

பக்தியாய்ப் பணிந்த பரமஹம்சர்;
சுகிர்னைக் வாத்துச் சற்குரு தேவர்
முத்திநெறி மொழிந்த முனிவரர்
மெய்த்திறம்விளக்குநா ர்மேதினி தன்னிற்
[முதல்வர்
திருவவதா ஞ் செய்தருள் நன்னுள்

வினைப் பொறையுயிர்த்தார். அக்குழந்தை ஒரு சிறு கொட்டிலிலேயே பிறந்தது பிறந்ததும் அடுப்புச் சாம்பரே அக் குழந்தைக்குப் பஞ்சணை மெத்தையாயிற்று; முழு மேனியும் திருநீறு பூசப்பெற்ற சிவபெருமானின் திருக்கோலம் காட்டுவான் கருதிப்போலும் அப் புண்ணியக் கன்று சாம்பரிற் பொறையுயிர்க்கப் பெறுவதாயிற்று.

இக் குழந்தையின் பிள்ளைத் திருநாமம் "கதாதர்" என்பது. குழவிப் பிராயந் தொடங்கி இக் குழந்தையினிடத்திற் திருவருட் பொலிவு சிறந்து விளங்குவதாயிற்று. கதாதார் வேதாகமப் பொருள்களையும் புராணேதிகாசப் பொருள்களை

'சென்றது கருதார்நாளைச்
சேர்வது நினையார் கண்முன்
நின்றது புசிப்பர் வெய்யி
நிலவாய்மின் விழுதவீழ்ந்தும்
பொன்றின சவம்வாழ்ந்தாலும்
புதுமையா யொன்றும் பாரார்
கன்றுநீ தென்னுர் சாட்சி
நவொன சிவன் முதநர்."

யும் ஓதாதுணர்ந்தனர். அவர் தமது இருபதாம் பிராயத்திலே இராணி இராஜமணி அம்மையார் அமைத்த காளிகா தேவியின் ஆலயத்து அருச்சகராயினர். அன்னையாரின் திருவருள் கைவரப்பெற்ற கதாரர் காட்சியளிக்கக் கண்டும் அவர் அருண்மொழிகளைக் காதாரக் கேட்டும் ஆநந்த பாவசத்து வாழ்வாராயினர்.

ஒரு சிலர் அவரைப் பித்தர் என்று கருதினர். அவருடைய திருவருட் பொலிவைக் கண்ணுற்ற ஞானிகளும் பெரியாரும் ஆநந்தக் கடலுள் ஆழ்ந்தவர்.

"பாலர் பேயர் பித்தரோடு
பான்மையென நிற்பதுவே
சீலமுள்ள ஞானிகளின்
செய்கை பராபரமே"

என்று திருவாய் மலர்ந்துள்ளார் நம்தாயுமான சுவாமிகளும்.

இவர் திருவடிக்காடிமைபூண்டுவிளங்கிய தொண்டர் பலராவர். இவரது பிரதம சிஷ்யர் ஸ்ரீமத் விவேகாநந்த சுவாமிகள் இவர் திருவவதாரஞ் செய்து இன்று நூறு ஆண்டுகள் நிறைவுறுகின்றன.

ஒருநூ றுண்டின்முன்னெனை ஓதுவர்,
ஆண்டொரு நூறும் நிறைவுறும் அவவை
ஈண்டியநிங்யன் ஈண்டியநிக்கான்
வாழ்மின்வாழ்த் தமின்!வம்மின்வாழ்த் தமின்!
செம்மனச் செல்வன் திருவடி பணிந்தே.

ஸ்ரீ ராமக் கிருஷ்ணதேவர் திருவடிகளே
சரணம்.

24 - 2 - 1936.

மா. பீதாம்பரன்,

திருச்சிற்றம்பலம்.

# பாலர்பகுதி.

## எனது அன்புமிக்க மருமக்களே!

சென்ற முறை உங்களுக்கு இந்தியக் காங்கிரஸ் மகாசபையைப் பற்றிச்சொல்லித்தந்தேன். மகாத்மா காந்தி இந்தக் காங்கிரஸ் மகாசபையிற் சேர்ந்தவுடன், சில காரியங்கள் செய்தார். அவற்றில் முதலாவது தீண்டாமை விலக்கு. அதாவது உலகத்திலேபிறந்தவர்களுக்கிடையே உயர்வு தாழ்வு இருக்கவொண்ணாது என்பதே. அடுத்ததாக என்னசெய்தார் என்பதைப்பற்றிச் சொல்லித் தருகிறேன்: கேளுங்கள்:

### மதுவிலக்கு

மனுஷர்க்கு வெறியை உண்டாக்கி, அவர்களுடைய புத்தியை மயக்கி அவர்களைக் கெட்டகாரியங்களிற் பிரவேசிக்கச் செய்யும் பொருள்களை மது என்கிறோம். கள், சாராயம், உவிஸ்கி, உவைன், பிரண்டி பீர் என்பன யாவும் வெறிப்பானங்களே. இவற்றில் ஒன்றைத்தானும் பருகியவுடன், மனுஷன் தன் சுய அறிவை மறக்கின்றான்; மறந்து கொலை, களவு முதலிய துட்ட வேலைகளைச் செய்கின்றான்: இது யாத்திரமா?

ஒரு முறை மதுபானம் செய்யப் பழகினவன் பின் அதனை விடுவதோ மிகவும் கஷ்டமான காரியமாகும். மதுபானம் செய்வதற்குப் பணம் இல்லாவிட்டால் அவன் தனது மனைவியின் தாலியைத்தானும் விற்று அப் பணத்தைக்கொண்டு மதுபானம் வாங்கிப் பருகப் பின்வாங்கமாட்டார்.

எனது அருமை மருமக்களே, மதுபானத்தின் கெடுதிகளைப்பற்றி உங்களுக்கு நான் அதிகம் சொல்லவேண்டியது இல்லை. மதுபானஞ் செய்வோர் செய்யும் கெடுதிகளை நீங்களே உங்கள் கண்ணால் கண்டிருப்பீர்கள். எங்களுடைய நாடு நல்லாயிருக்கவேண்டுமானால், நாங்கள் மதுபானம் செய்யும் வழக்கத்தை அடியோடு தொலைக்க வேண்டும். மகாத்மா காந்தி அவர்களும் இதனை உணர்ந்து மதுபானம் என்னும் கொடிய பழக்கத்தை இந்தியாவினின்றும் நீக்குதற்கு அரும்பாடுபட்டார். இப்போதும் பாடுபட்டுவருகின்றார்.

எனது வாஞ்சையுள்ள மருமக்களே, மதுபானம் மிகவும் கெட்டது. அது மனுஷரை அடிமையாக்கிவிடும். மதுபானம் செய்பவர் வீரனாக முடியாது. ஆனபடியால் நாங்கள் வீரராய் இருக்கவேண்டுமானால் மதுபானத்தை நீக்கவேண்டும்; இல்லையா?

பிள்ளைகளே, உங்களின் இனத்தவர், சனத்தவரில் யாரேனும் மதுபானம் செய்பவரானால், நீங்கள் அவர்களைத் தடுத்தல் வேண்டும்; அவர்களுக்கு நீங்கள் இந்த உண்மையைச் சொல்லி அவர்களைத் திருத்தல் வேண்டும்.

அடுத்த முறை உங்களுக்கு நான் மகாத்மா காந்தி போதித்த அஹிம்சையைப்பற்றிச் சொல்லித்தருகின்றேன்.



இந்தியாவின் மறறைய பாகங்களிலும் ஸ்ரீ சைதன்யர், ஸ்ரீ ஏகநாதன் முதலிய பெரியார்கள் காலத்துக்குக் காலம் தோன்றித் தங்கள் தங்கள் பாஷைகளின்மூலம் எங்கள் சமயத்தை வளர்த்து வந்தார்கள்.

சிவபெருமான், தம்முடைய பிள்ளைகளாகிய எங்கள் மீது கொண்ட அன்பினாலே காலத்துக்குக் காலம் பெரியார்களாகிய ஞானிகளை அனுப்புகின்றார். இற்றைக்கு ஒருநூறு ஆண்டுகட்குமுன் 1836ம் வரு பெப்ருவரிமீ 18ம் திகதி சிவபெருமானுடைய திருவருளினாலே "ஸ்ரீ இராமக்கிருஷ்ண பரமஹம்ச தேவர்" திருவவதாரஞ் செய்தருளினார். ஸ்ரீ இராமக்கிருஷ்ண பரமஹம்ச தேவரின் திருவவதாரத்திருநாள் சென்ற திங்கட்கிழமை (24-2-36) நிகழ்ந்தது. இவருடைய அடியார்கள் இந்தியா, இலங்கை, அமெரிக்கா, ஜேர்மனி, இங்கிலாந்து முதலிய இடங்களில்இருக்கிறார்கள். அவர்கள் இத்திருநாளிலே குருபூசை முதலியன செய்து கொண்டாடுவார்கள். அன்றுமுதல் அடுத்த வருடத் திருவவதாரத் திருநாள் வரையுமுள்ள ஒருவருடகாலம் "நூற்றாண்டு நிறைவுத் திருவிழாக் கால" மாகக் கொண்டாடப்படும்.

இத்திருநாளில் (24-2-36) ஸ்ரீ இராமக்கிருஷ்ண பரமஹம்ச தேவரைப் போற்றுதற்குப் பயன்படுமாறு சில பாட்டுக்கள் பாடியுள்ளேன். அப்பாடல்களுட் சிலவற்றை இப்பாலர் பகுதியில் வெளியிடுகின்றேன். படித்துச் சந்தோஷப்படுவீர்கள் என்று எண்ணுகிறேன்.

(1) [ "பொன்னார் மேனியனே" என்பது போலப் படிப்பது.]

சுதிராம் *1 நற் சுதனே துயர்
 தீர்க்கப் பிறந்தவனே
மதியாய் செஞ்சடையான் வரம்
 ஈந்திடச் சோதியதாய்
மதிவாழ் மாதற்சி மலர்ச்
 சந்த்ரமணி *2 வயிற்றில்
உதித்தாய் எங்குருவே உயர்
 மெய்யொளி சற்குருவே.

["மற்றுப் பற்றெனக் கின்றி நின்திருப்பாதமே மனம் பாவித்தேன்" என்பதுபோலப்படிப்பது.]

வங்க நாட்டினில் நல்வ ளம்பெறு
 காமர் பூகுரெ னும்பதி
எங்கள் சற்குரு வந்த நற்பதி
 என்னும்பேற்றுவம்இன்னுர் நாள்!
சங்க ரனருள் பெற்ற சந்த்ரம
 ணிக ருவுயிர்த் திட்டநாள்
மங்க ளம்பெற நாமு சென்றன
 மகிழ்ந்து பாடுவம் வம்மின்காள்.

["தலையே நீ வணங்காய்" என்பது போல]

1. தலையே நீவணங்காய் சகம்
 வாழ்விக்க வந்தவனை
 மலையான்மாமகன் வாழ்த்துங்குரு
 தலையே நீ வணங்காய் [வனைத்
2. கண்காள் காண்மின்களோ கடல்
 வண்ணன் காதாதரனே
 மண்வாழ்மக்களை வாழ்விக்கவந்த
 கண்காள்காண்மின்களே [னன்
3. செவிகாள் கேண் மின்களே ஸ்ரீ
 ராமகிருஷ்ணன்செயலை
 கவிகள்பாடியே காதன்மிக்கோர்
 [களாய்ச்
 செவிகாள் கேண்மினகளே
4. வாயே வாழ்த்து கண்டாய் மறை
 கண்ட *3 மக்ஸ்மூலரென்றும்
 தாயோர்தோத்திரஞ்செய்யுந்தலை
 வாயேவாழ்த்துகண்டாய்[ வனை
5. நெஞ்சே நீ நினையாய் நெறி
 காட்டிய நின்மலனை
 பஞ்ச வடியிற் பரமஹம்ஸர் பதம்
 நெஞ்சே நீ நினையாய்
6. கைகாள் கூப்பித் தொழீர் கலை
 ஓதா துணர்ந்தவனை
 மையாள்கன்னி *4 மலரால்யன்ப
 கைகாள்கூப்பித்தொழீர் [தப
7. வான்காள்பெய்மின்களே—மலர்
 மாமழைஇத்திதியில்
 தேன்பாய்பூம் பொழில்சேர்தக்ஷி
 [ணேஸ்வரம்
 வான்காள் பெய்ம்மின்களே

ஸ்ரீ ராமக் கிருஷ்ண பரமஹம்ச தேவர் திருவடிகளே சரணம்.

"கப்புமாமா" அவர்களே,
தலைவர், இந்துசாதனப் பாலர்சங்கம்,
யாழ்ப்பாணம்.

மாமா,

தயவுசெய்து என்னையும் தங்கள் சங்கத்திற் சேர்க்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். நான் இவ்விபாலர் ஒழுங்குகளை காரியமாவது செய்வேன்.

பெயர்..........................
வயது..........................
படிக்கும் வகுப்பு..........................
இந்துசாதனப் பெயர்..........................

இங்ஙனம்
உங்கள் வாத்சையுள்ள
கப்புமாமா.

*1. ஸ்ரீ இராமக்கிருஷ்ண தேவரின் தந்தையார்: க்ஷுதிராம் சட்டோபாத்தியாயர்.

*2. தாயார்: சந்திரமணி தேவியார்

*3 மக்ஸ்மூலர் என்பர் ஜேர்மன்தேசத்துப் புலவர் திலகர்; இவரும் ஸ்ரீ ராமகிருஷ்ண தேவர்சரித்திரத்தை அழகாக எழுதியிருக்கிறார்.

*4. தக்ஷிணேஸ்வரத்திலுள்ள காளிகோவிலைக் கட்டியவர் இராணி இராஜமணி என்னும் பெண்மணியாவர் இத்திருக்கோவிலிலேயே எங்கள் குருதேவர் பூசகராகவிருந்து காளித்தாயின் திருவருள் பெற்றார்.

## ஸ்ரீ இராமக்கிருஷ்ண பரமஹம்ச தேவர் திருவவதாரத் திருநாள்.

(24—2—1936)

(திரு மா. பீதாம்பரன்.

பிள்ளைகளே,

தேவாரம் திருவாசகம் என்னும் தமிழ் வேதங்களைத் திருவாய் மலர்ந்தருளியவர்கள் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார், மாணிக்கவாசக சுவாமிகள் என்னும்நாயன்மார்கள் நால்வருமே. இவர்கள் ஏறக்குறைய 1500 ஆண்டுகட்கு முன்னே தமிழ் நாட்டிலே விளங்கினார்கள். இவர்கள் காலத்துக்கு முன் திருமூலநாயனார், கண்ணப்பநாயனார் முதலிய பெரியார்கள் இருந்தனர். இவர்கள் தென் இந்தியாவில் விளங்கியவர்கள்.

## கைப்பற்றப்பட்ட கைத் துப்பாக்கிகள்

கல்கத்தாவில் 'சிட்டி அப் கிளைஸ்ட்சர்ச்' என்ற கப்பலில் 40 பிஸ்தல்களும், 3000 தோட்டாக்களும் கைப்பற்றப்பட்டன. இதைப் பற்றி விசாரித்ததில் இவை ஸ்பெயினில் செய்யப்பட்டவை என்றும் அங்கிருந்து ஆண்டுவர்ப்பிற்கு கள்ளத்தனமாகக்கொண்டு போகப்பட்டு கல்கத்தாவுக்குப் பெட்டிகளில் வைத்துக்கொண்டு வரப்பட்டனவென்றும் தெரிய வருகிறது. இது சம்பந்தமாகக் கைது செய்யப்பட்ட 60 மாலுமிகளும் சென்ற வாரம் பிரதம நீதிபதிமுன்பு விசாரணை செய்யப்பட்டனர். அவர்களை மேற்கொண்டு காவலில்வைக்கஉத்தரவாயிருக்கிறது. ஒரு காலி வீட்டிலிருந்து பழைய மாதிரி துப்பாக்கி ஒன்றைப் போலீஸார் கைப்பற்றினர் அதன் சொந்தக்காரரைப் போலீசார் தேடுகின்றனர்.

# வீரனா? வெறியனா?

## முசோலினியின் உண்மைத்தன்மை.

## அதனை வெளிக்காட்டிய அபிசீனியர்.

## அதிகார வெறிபிடித்த அரசியற் சூதன்.

சென்ற பதின்மூன்று வருஷங்களாக ஐரோப்பிய ராஜ்ய விஷயங்களையும் பிரிட்டிஷாரின் கொள்கைகளையும் பெனிடோ முசோலினியின் பெருமைப்புராணம் மிகவும்பாதித்து வருகிறது. இவரைத்தங்களுடைய லட்சியமாகக் கொள்ளாத சர்வாதிகாரிகளில்லை; இவரைப் போற்றாத ராஜீயவாதிகளில்லை; இவரைத் தரிசிக்க எத்தனையோ அரசியல் தலைவர்கள் யாத்திரை சென்றிருக்கின்றனர்; லாவால், சேம்பாலின மாக்டொனல்டு பிரபுக்கள் இவர் முன் வணக்க ஒடுக்கமாக நின்றிருக்கிறார்கள். பாஸிஸ்டு இயக்கத்தின சிருஷ்டிகர்த்தாவான இவருடன் புகைப் படமெடுத்துக்கொள்ள ஜெர்மனியின சர்வாதிகாரிகூட ஸ்ட்ராவுக்குப் பறந்தோடினார்; சாமான்ய மனிதனின மரியாதைக்கோ அளவில்லை "டியூஸ்" இந்தக் காலத்தின் தலைமையான புருஷர் என்று ஒரு அமெரிக்க ஸ்தானிகர் எழுதி வைத்திருக்கிறார்.

முசோலினி மஹாத்மியம் அவரைப்பற்றிக் கூறுவதாவது:—

"அவர் ஒரு சமூகரட்சகர்; பொதுவுடமையை எதிர்த்து வெற்றிபெற்ற வீரர்; இத்தலியையும் அதன் மூலமாக ஐரோப்பாவையும் புரட்சியினால் சிதுலைந்து கெட்டுப்போகாமல் காப்பாற்றிய புண்ணிய புருஷர்.

அழிவு கிட்டிக்கொண்டிருக்கிறது; குழப்பம பொங்கிக்கொண்டிருக்கது; அந்தகாரச் சூழ்ந்துநின்றது; முசோலினி என்ற இரவி தோற்றினான்; தனது வீரகிரணங்களைப் பரப்பினான் மறம் மடிவுற்றது; புன்மைகள் அழிந்தன, புனர் ஜன்மம் உண்டாயிற்று புதிய இத்தாலி தோன்றியது ஐரோப்பாவின சுதந்தரத்தை பொதுவுடமை விழுங்கிவிடாமல் காப்பாற்ற முன்வந்தது.

"இவர் இந்த இருபதாம் நூற்றாண்டிலே ஒரு புதிய மனோ ரஸத்தைத் தோற்றுவித்தார், எண்ணற்கரிய துணிவும எழுதற்கரிய செயலாற்றுந் தன்மையும் படைத்தவர்" இவ்விதமாகத்தானே முசோலினி மஹாத்மியம் அத்தியாயம் அத்தியாயமாகச் சொல்லப்படுகிறது.

இந்த முசோலினி மஹாத்மியக் கிலியினால் தான் ஐரோப்பிய ராஜீயவாதிகள் அபிசீனியத் தகராறு சம்பந்தமாக இத்தாலிக்கு விரோதமான நடவடிக்கை எடுத்துக்கொள்ளத் தயங்கினார்கள்; ஹோர்-லவால் கோஷ்டிகள் வீரபுருஷனை குற்றவாளியென்று குறை கூறலதெங்ஙனம் என்று திகைத்தனர்.

இப்பொழுது இவருடைய பகட்டுவம் மறைந்துகொண்டு வருகிறது. இவன் வீரனில்லை; வெறிகொண்டவன். சுதந்திரம் காத்த சுத்தவீரனில்லை; சூழ்ச்சிசெய்யும் வேலைக்காரன் என்ற எண்ணம் ஏற்பட்டுவிட்டது. இவருடைய ஜீவியசரித்திர சம்பவங்களின் உண்மைகளை ஆர்தர் பார்க்கர் என்பவர் எழுதியுள்ள ஒரு புத்தகத்தில் எடுத்துக் காட்டுகிறார்.

முசோலினி, இத்தாலி வேலைநிறுத்தக் குழப்பங்களால் சீர்குலைந்து நின்றபோது காப்பாற்ற வந்தார் என்பது உண்மைக்கு விரோதமென்றும் இவர் ஒரு காடையர்கள் கூட்டத்தின் தலைவராகவே, அதிகார ஆசையால் தூண்டப்பட்டு ஒரு கட்சியிற் சேர்ந்துகொண்டாரென்றும் எடுத்துக் காட்டுகிறார்.

1921, 22ல் நடந்த பாஸிஸ்ட் புத்தம் என்பது முசோலினியின் காலிக கூட்டம் நிர்கதியற்ற தொழிலாளர்களைப் போலீசார் உதவியுடன் பலவித ஹிம்சை செய்ததையே குறிப்பிடுகிறதென்றும் இப்பொழுது மார்ஷல் படாக்ளியோ எனக் கூறப்படும் மனிதர் அப்பொழுது போலீஸ் தலைவராக இருந்து முசோலினியின் சட்டுழியங்களுக்கு உதவிபுரிந்தவரென்றும் இப்புத்தகத்தில் கூறப்பட்டிருக்கிறது.

முசோலினி பொதுவுடமை இயக்கத்தின் பயங்கர வேகத்தைத் தடுத்ததாகக் கூறப்படுவது பொய்; கூட்டுறவு இயக்கம், தொழிலாளர் சங்கம், சட்டத்தின்படி நடக்கும் கட்சிகளையே இவர் நசுக்கப் பாடுபட்டார்.

இவருடைய சூழ்ச்சிகளும் சதியாலோசனைகளும் வெற்றிபெற்று ரோமாபுரி அரசர் இவரைப் பிரதம மந்திரியாக நியமித்த செய்தி கிடைக்கும்வரை இவர் மிலான் நகரத்தில் தம்முடைய பத்திரிகைக் காரியாலயத்தில் பதுங்கிக்கொண்டிருந்தார். ஆகவே ஆரம்பம் முதல் இவருடைய சூழ்ச்சிகளெல்லாம் ராஜதந்திரம் எனவும் இவருடைய அட்டூழியங்களெல்லாம் துஷ்ட நிக்ரஹம் எனவும் திரித்துக் கூறப்பட்டதால் மாத்துள்கரால் செய்யப்பட்ட பெம்மைக்குச் சமமான இந்த வீரனை ஸீஸரின் மறு அவதாரம் என்று ஜனங்கள் பிரமிக்கும்படியான நிலைமை ஏற்பட்டது. ஆனால் ஒரு உண்மையைமட்டும் யாரும் மறக்க முடியாது. முசோலினியிடத்தில் பல திறமையான அம்சங்கள் இருக்கின்றன. அவை ஸீஸரின் அம்சங்கள் அன்று; நெபோலியனின் குணங்கள். முசோலினி தேசத்தலைமைக்குத் தகுதியன்று. காடையர்கள் கூட்டத்திற்கே தலைமைவகிக்கத் தகுதியுள்ளவர் இவர்தான் உலகத்தின் பல மேதாவிகளான ராஜதந்திரிகளை ஏமாற்றிவந்தார். இப்பொழுது ஒரு ஆப்பிரிக்கா ஜாதியார் இவருடைய உண்மை உருவத்தை வெளிப்படுத்திவிட்டனர். இது கடவுளன்று, கற்சிலையென்பதை உலகத்தாருக்குக் காட்டிவிட்டனர்.


## Notice of Sale of Land.

## காணி விற்பனவு விளம்பரம்.

அருணசலம் சதிரவேலு காரைதீவு மேற்கு வழக்காளி.

இராமனுசர் முருகேசவும் பெண் இன்னத்தங்கமும் காரைதீவு மேற்கு எதிராளிகள்.

யாழ்ப்பாண டிஸ்திரிக் கோட்டின் 8455 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1936 ம் வருஷம் பங்குனி மீ 17ந் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### காணி விபரம்.

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் தீவுப்பகுதி தலகோவடையிலுற பயறிக் கூடல் விஸ்தீர்ணம் 12½ம் பரப்பும் பனைகளும் வடலிகளும் வீடுகளும் எல்லைகிழக்கு முருகேச சங்கரப்பிள்ளையின் ஆதனம் வடக்கு கந்தர் காசிப்பிள்ளைக்கும் பங்காளருக்கும் கணபதிப்பிள்ளை முருகேசவுக்குமுரிய ஆதனங்கள் மேற்குஒழுங்கை தெற்கு சரவண கைம்பெண் பாறுவதியின் ஆதனமும் முருகேசு பெண் மீனாட்சியின் ஆதனமும் ஒழுங்கையும்.

காரைதீவு
17-2-36

ச. ஆறுமுகம்
கொம்மிஷனர்.

Mis 284 17-2-36.



## தேவை.

தமிழில் கெதியாகவும் நல்லெழுத்தாகவும் எழுதக்கூடிய ஒரு லிகிதர் தேவை. தமிழ் 7ம் 8ம் வகுப்பிற் சித்திபெற்ற மாணவராகவுமிருக்கலாம். நல்லொழுக்கமும் நம்பிக்கையுமுடையவராயிருத்தல் வேண்டும். ஆரம்ப வேதனம் மாதம் 10 ரூபா. வருடந்தோறும் வேதனம் அதிகரிக்கப்படும். விரும்புவோர் 28—2—36 க்குள் தங்கள் சொந்தக் கையெழுத்தால் விண்ணப்பித்துக் கொள்ள வேண்டும்.

மானேஜர்,
சோதிடப்பிரகாச யந்திரசாலை,
கொக்குவில்.

Mis277. 20&27-2-36.

# ஒற்றுமை! ஒற்றுமை!

## இலங்கைத்தலைவர்க்கோர் வேண்டுகோள் சிங்களத்தலைவர்கள் செவிசாய்ப்பாரா?

### ஸ்ரீதுரைசுவாமியின் முன்மாதிரி.

(ஸிலோன் ஸ்பெக்ரேற்றர்'' என்னும்பத்திரிகையி லிருந்து மொழிபெயர்த்து அதுவதிக்கப்பட்டதன் சாரம்,)

மிஸ்டர் A. F. மொலமுரே பட்சபாதமின்றி ஆராய்ச்சியுடன் தீர்ப்புக் கூறவல்லவர் என்பது அன்னவர் அரசாங்கசபைத் தலைவராயிருந்த காலத்தில் அவரால் நன்கு காட்டப்பட்டதாகும். இப்போதப் மிஸ்டர் மொலமுரே, அத்தகைய ஆராய்ச்சி, பட்சபாதமில்லா அபிப்பிராயமுடையவர் என்பது அவர் "தற்போதைய அரசியல் நிலைமை" என்னும் விஷயமாகக் கொழும்பு "டைம்ஸ்" பத்திரிகைக் கெழுதிய ஓர் கட்டுரை வாயிலாக அறியலாகும். அந்தக் கட்டுரையிலே, இலங்கையானது அரசியல் விஷயமாகச் சொல்லுமிடத்து மிகவும் பிற்போக்கடைந்திருக்கிற தென்றும், இப்போதுள்ள அரைகுறையான அரசியற்றிட்டத்தில் ஏதும் மாற்றம் செய்ய வேண்டுமானால் இலங்கையர் யாவரும் ஒற்றுமையுடன் கிளர்ச்சிசெய்ய வேண்டுமென்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

#### இலங்கையின் கேவல நிலைமை

இப்போது இலங்கை மிகவும் கேவல நிலைமையை யடைந்திருக்கின்றது ஒவ்வோர்வகுப்பிலும் வகுப்புவாதம் தோற்றி அவர்களின் கண்களைக் குருடாக்கிவிட்டன. இலங்கை முழுவதும் ஈடேற வேண்டுமென்ற அவா, வாஞ்சை இந்த வகுப்புவாதத் தலைவர்களுக்கு இல்லை என் சமுகத்திற்கு அரசாங்கசபையில் இவ்வளவு ஸ்தானங்கள் வேண்டும், இவ்வளவு உத்தியோகங்கள் வேண்டும் என்ற ஒருவரோடொருவர் மதி மயங்கி நிலைபிறழ்ந்து வாதிட்டுப் போரிடுகின்றனர். மிஸ்டர் மொலமுரையின் கூற்றில் அதிகம் உண்மையிருக்கின்றது. பெரும்பான்மைச் சமுகத்தினரான சிங்களர் தம் மனப்பான்மையை மாற்றித் தாராளமனதுகொண்டு இருந்தால், சிறுபான்மையோர அவர்களுடன் ஒத்துழைக்க முடியும். அதன் பயனாக இலங்கையர் யாவரும் ஒற்றுமை கொள்ள முடியும். எனவே, பெரும்பான்மைச் சமூகத்தைச் சேர்ந்த மிஸ்டர் மொலமுரேயின் யதார்த்த மொழிகளை, யோசனையை வரவேற்கிறோம்.

#### மிகவும் பிற்போக்கு.

"இலங்கை இப்போது மிகவும் பிற்போக்கடைந்திருக்கிறது. இங்கே இப்போது அவநம்பிக்கையும் வேற்றுமையுமே தாண்டவமாடுகின்றன என்று நான் தயக்கமின்றிக் கூறுவேன்" என்கிறார் மிஸ்டர் மொலமுரே

1918-ம் ஆண்டில் சேர். பொன், அருணசலம் அவர்களின் பாதத்தில் இருந்து அரசியல்ஞானம் கற்றவர் அநேக பிரமுகர்கள. அதன் பயனாகப் பல்வேறு சமூகத் தலைவர்கள் யாவரும் ஒன்று கூடி அந்த ஆண்டில் இலங்கைத் தேசிய காங்கிரஸ் என்னும் ஒன்றைத் தாபித்தனர். ஆனால், அந்தத் தேசிய ஸ்தாபனத்தின் மீது எந்தப் பாவியின் துர்த்திருஷ்டிபட்டதோ அறியேம், அதிற் சேர்ந்திருந்தார்க்கிடையே பிளவு ஏற்பட்டது. இத்தலைவர் சிலர்க்கிடையே இருந்த சுயநல வாஞ்சையும் அதிகார ஆசையுமே இப்படியான பிளவுக்குக் காரணங்களாம் இந்தப் பிளவு நீங்காது, ஆண்டுகள் கழியக் கழிய அதிகமாயது. ஈற்றில் டொனமூர் அரசியற்றிட்டம் இந்தப் பிளவினை உச்சநிலைக்குக் கொண்டுவந்தது.

#### அதிசயந்தான்.

இப்போது எமக்கு இருக்கும் அரசியல் தாராள போக்கு உடையது. சர்வசன வாக்குரிமை இருக்கிறது இப்படியான நிலைமையில் நாம் 20 வருஷங்களுக்கு முன்னிருந்த நிலையிலும் பார்க்க இப்போது மிகவும் பிற்போக்கான நிலைமையில் இருப்பது அதிசயந்தான். பிரித்தாளுங் கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டிய வர்க்கத்தினரைச் சேர்ந்த எமது தேசாதிபதிதானும் எமக்குள்ளே இருக்கும் வேற்றுமையைக் கண்டித்து இருக்கின்றார் என்றால் யாம் இனிக் கூறவேண்டியது என்ன?

#### பொது லட்சியம்.

நாம் சுயராச்சியம் கேட்கவேண்டியதே பொது லட்சியம். இந்த லட்சியத்தை அடைவதற்காக ஆவது நாம் எல்லோரும் ஒற்றுமை கொள்ள வேண்டியது அவசியம். "அரசியல் விஷயத்தில் எமக்கிடையேயுள்ள வேற்றுமைகளினால் நாம் அல்லோல கல்லோல நிலைமையில இருக்கிறேம். இந்த நிலைமையில் நாம் எவ்வளவு தீர்மானங்களை அரசாங்க சபையில் நிறைவேற்றினாலும் அரசியற் சீர்திருத்தம் கிடைக்குமா? ஒருபோதும் கிடைக்கமாட்டாது என்பதே எமது அபிப்பிராயம்" என்று மிஸ்டர் மொலமுரே கூறுவதுடன் யாரும் வேறுபாடு கொள்ள முடியாது. இன்னும் "முழுத் தேசத்தின் நன்மையை யிட்டுப், இலங்கையில் தலைவர்களாயுள்ளார் கேவலம், சுயநலவாஞ்சையைத் தவிர்க்கவேண்டும். இல்லையேல், இங்குள்ளார்க்குள்ளே ஒற்றுமை ஏற்படாது. எமநாட்டிற்குக் கதி மோட்சமும் இல்லை" என்ற மிஸ்டர் மொலமுரே கூறுவதையும் சேனநாயக்கா, ஜெயதிலகாக் கோஷ்டியினர் ஊன்றிச் சிந்திக்குமாறு அவர்களை விநயத்துடன் வேண்டிக் கொள்ளுகிறேம்.

#### நற்காலம்.

எமது அரசியல் நிலைமையில் நன்மைக்கேதுவான நிலை ஒன்று ஏற்படுமா? அரசாங்க சபையிலே இதுகாறும் தலைவராயிருந்த சேர் D B. ஜெயத்திலகாவும் அரசியற்றுறத்தமசோதாவை எடுத்தாண்ட மிஸ்டர் G. C. S கொறியாவும் போட்டியின்றி அரசாங்கசபைப் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றனர்.

இவர்கள் மன மாற்றம் கொள்ள வேண்டும். அன்றேல் மிஸ்டர் மொலமுரே கூறியாங்கு எமக்கு அரசியல் ஆபத்து ஏற்படுவது நிச்சயம்

#### தமிழர் நிலை.

தமிழ்த் தலைவர்கள் நிலைமை என்ன? அரசாங்கசபையிலே ஸ்ரீமான் வை துரைசுவாமி அவர்களுக்கும் ஓர் ஸ்தானம் கிடைத்தமையையிட்டு உண்மையில் நாம் ஆனந்தமடைகின்றேம்.

ஸ்ரீமான் துரைசுவாமி அவர்கள் சுயராச்சியலட்சியத்தைத் தன்முன் கொண்டவர். இந்தச் சுயராச்சியத்தைப்பெறுதற்காய் இலங்கையர் யாவரும் ஒற்றுமை பூணவேண்டுமெனும் கொள்கையைக் கடைப்பிடிப்பவர் இதில் இருந்து அவர் தமிழ் மக்களைக் கைவிடுத்துச் சிங்கள மக்கள் சார்பாகச் சென்றுவிடுவார் என்பது கருத்து அல்ல? அவர் தக்க அறிவும் அரசியல் ஞானமும் படைத்தவர்; சாதுரியத்துடன் அவர் எடுத்த கருமத்தைச் சகலஜாதியார்க்கும் உவப்பச் சாதிப்பர்? அவரைப் போலவே மற்றத் தமிழ்த்தலைவர்களும் கடமையாற்றுவார்கள் என்று காத்திருக்கிறேம்......

#### மரணதண்டனை.

நீர்கொழும்பு டிஸ்திறிக்கைச் சேர்ந்த W. சார்ப்பின் அப்புகாமி என்பவன் இருவரைக் கொலைசெய்தான் என்ற குற்றத்தின் பேரில் கொழும்பு சுப்பிறீம் கோட்டில் மரணதண்டனை விதிக்கப்பட்டான்.

# அரசாங்கசபைப் பிரதிநிதித் தேர்தல்.

—o—

## அபேட்சகர்களும் வெற்றி பெற்றோரும்.

சென்ற சனிக்கிழமை (23-2-36) இலங்கையில் இடங்கள்தோறும் நடந்த சனப்பிரதிநிதித் தேர்தல்களின் பெறுபேறுகள்:-

#### நீர்கொழும்பு.

இராசவாசல் முதலியார் A. E. ராசபக்ஷி (வெற்றி)
மிஸ்டர் T. ரணசிங்க

#### பாணந்துறை

மிஸ்டர் D. S. டீ. வொன்ஸேய்க்க (வெற்றி)
மிஸ்டர் லெஸ்லி குணவர்டன

#### கொழும்பு தெற்கு.

டக்டர் A. P. டீ ஸோய்ஸா (வெற்றி)
டக்டர் E. A. குரே.

#### பலப்பிட்டியா

மிஸ்டர் விருன்ஸிஸ் டீ சொய்சா K. C. (வெற்றி)
மிஸ்டர் G. ஆர்தர் டீ. சோய்ஸா

#### திருக்கோணமலை மட்டக்களப்பு

மிஸ்டர் E. R. தம்பிமுத்து (வெற்றி)
மிஸ்டர் M. M. சுப்பிரமணியம்

#### இரத்தினபுரி

மிஸ்டர் ஜயசூரதுமப்பு (வெற்றி)
மிஸ்டர் D. J. விமலசுரேந்திர

#### நாரம்மல

மிஸ்டர் ஸ்ரீ பாலசமரக்கோடி (வெற்றி)
மிஸ்டர் W. H. டீ S. ஜெயசுந்தர

#### பண்டாரவளை

மிஸ்டர் D. D. குணசேகர (வெற்றி)
மிஸ்டர் A. F. மோர்டன்
மிஸ்டர் B. H. டூல்
மிஸ்டர் P. B. M. பண்டாரநாயக்க

#### பருத்தித்துறை

மிஸ்டர் G. C. பொன்னம்பலம் (வெற்றி)
மிஸ்டர் K. பாலசிங்கம்

திங்கட்கிழமை (24-2-36) நடைபெற்ற தேர்தல்கள்.

#### கொழும்பு வடக்கு

ஸ்ரீமதி நேசம் சரவணமுத்து (வெற்றி)
மிஸ்டர் ஜோஜெப் டீ. சில்வா
டக்டர் S. C. போல
மிஸ்டர் S. F. R. றொட்றிக்கோ

#### கலகெத்திறு.

மிஸ்டர் E. A. நுகவெலா (வெற்றி)
மிஸ்டர் P. B. ரணராஜா
மிஸ்டர் W. மதவெலா

#### மாத்தளை

மிஸ்டர் B. H. அலுவிகாரை (வெற்றி)
மிஸ்டர் எட்வேர்ட் டீ சில்வா
மிஸ்டர் W. T. B. கரியலாடை
மிஸ்டர் W. கோபாலவா

செவ்வாய்க்கிழமை (25-2-36) நடைபெற்ற தேர்தல்கள்.

#### காலி

மிஸ்டர் H. W. அமரசூரிய (வெற்றி)
மிஸ்டர் C. H. விக்கிரமநாயக்க

குறித்த அமரசூரிய என்பவர் 23852 சம்மதச்சீட்டுக்களை மேலதிகமாகப் பெற்றுத் தமது எதிரியை வென்றுள்ளார். இப்படியான வெற்றியை இலங்கையில் எக்காலத்தும் எவரேனும் பெற்றதில்லையாம்.

#### ஹொரூண

மிஸ்டர் A. P. ஜயசூரிய (வெற்றி)
மிஸ்டர் E. W. பெறேரு

#### யாழ்ப்பாணம் - தென்மராட்சி

ஸ்ரீ அ. மகாதேவா (வெற்றி)
மிஸ்டர் நெவின்ஸ் செல்வத்துரை

#### காங்கேசன் துறைத் தெரிவு

காங்கேசன் துறைப் பகுதிக்கான பொதுத் தேர்தல் இன்று காலை 8 மணி தொடக்கமாக நடைபெறுகின்றது. ஸ்ரீமான் சு. நடேசபிள்ளை அவர்களும் ஸ்ரீமான் அ. பொன்னையா அவர்களும் அபேட்சகர்களாகப் போட்டியிடுகின்றனர். ஸ்ரீமான் நடேசபிள்ளைக்குரிய நிறம் பச்சை; ஸ்ரீமான் பொன்னையாவுக்குரிய நிறம் சிகப்பு

# மீன்காரச்சிங்களான் அகப்பட்ட விதம்.

## துவிச்சக்கரம் சென்ற ஆசிரியர்கதி. வண்டியிற்சென்ற சித்தம்பலம் கூற்று.

### சுப்பிறீங்கோட்டில் விசாரணை.

(நமது நிருபர்)

யாழ்ப்பாணம சுப்பிறீம்கோட்டில் சென்ற ஆவணிமாதம் 14ம் திகதி வரணியைச்சேர்ந்த காம்பக்குறிச்சி என்னுமிடத்தில் முத்துவேலு அருணாசலம் என்பவர் ஓர் சயிக்கிளில் கொடிகாமமிருந்து பருத்தித்துறைக்குப் போகும் றோட்டில் யாழ்ப்பாணமிருந்து கொழும்புக்கு மீன் அனுப்பும் நிலவீர கிறிஸ் அப்பு என்னும் மோட்டார்ச் சாரதி அவரை (அருணசலத்தை)த் தட்டிவிழ்த்திக் காயப்படுத்திக் கொன்றார் என்ற வழக்கு விசாரணைக் கெடுத்துக்கொள்ளப்பட்டது.

வழக்காளி சார்பாக முடிக்குரிய நியாயவாதி வீரசூரியாவும் எதிரி சார்பாக ஸ்ரீ S. D. தம்புவும் வாதித்தனர்.

வேலாயுதர் சித்தம்பலம் கூறிய சாட்சியமாவது:- "சென்ற ஆவணி மாதம் 14ம் திகதி நான் எனது வீட்டிலிருந்து இடைக்குறிச்சிக்கு எரு ஏற்றிச் சென்றேன். அன்று இரவு 7 மணியளவில் இறந்த அருணசலம் ஓர் துவிச்சக்கரத்தில் வந்தார். அவர் எதிர்ப்புறமாக வந்தவர். அவர் வந்து என்னை விலத்தினார். கொஞ்சநேரத்தின்பின் ஓர் சத்தம் கேட்டது. நான் திரும்பிப் பார்த்தபோது ஓர் காரின் வெளிச்சம் கண்டேன். கண்கள் கூசியதால் யாதும் பார்க்கமுடியாமலிருந்தது. கார் "கோன்" அடிக்காது எனது வண்டிலை வந்து விலத்திச் சென்றது. இந்தக் கார்க்குள்ளும் வெளியிலும் மீன் பெட்டிகள் இருந்தன. எனக்கு ஒருமுறை தான் சத்தம் கேட்டது. நான் எனது மாடுகளை மறித்துவிட்டுப் பார்க்கவில்லை. ஏன் என்றால் எனது மாடுகள் வீட்டைநோக்கிச் செல்லும்போது ஆளில்லாமல் சும்மாமறித்துவிட்டால் நிற்கமாட்டா என்பதினாலேயே. மறுநாள்காலை நான் அந்த வழியால் வண்டியுடன் போகும்போது சனங்கள் கூட்டமாய் நின்றார்கள். நான் அப்போது என்ன என்று கேட்டபோது அவர்கள் கார்தட்டி இவரைவிழுத்திவிட்டது என்றார்கள். அது அந்த நடனமாதர்களை ஏற்றிய கார் என்றார்கள். நீதிபதி அது நடனமாதர்களை ஏற்றியகாரல்ல மீன் ஏற்றிய கார் என்றார்." வழக்கு விசாரணை நடக்கிறது.

## மதிப்புரை.

#### தாத்துருவருட திருக்கணித பஞ்சாங்கம்.

இது சென்னை, திருநெல்வேலிக் கேணி சோதிட பூஷணம் பிரமஸ்ரீ T. S. விசுவநாத சிரோளதிகள் (B. A.) பார்வையில் அவரது சிஷ்யர், யாழ்ப்பாணத்து மட்டுவில் பிரமஸ்ரீ S. சுப்பிரமணிய ஐயரவர்களால் வழக்கம் போல் நுட்பமாகக் கணித்து, தங்கள் சோதிடரத்நாகர யந்திரசாலையில் அச்சிடப்பட்டு வெளிவந்திருக்கிறது. பிரதியொன்றன் விலை சதம் 25 (அஞ 4) மேற்படி கணிதரிடத்தும் பிரபல கடைகள் தோறும் பெறற்பாலது. பஞ்சாங்கப் பிரதியின் பொருட்டு நன்றி கூறுகின்றேம்.

#### மயானகாண்டம் ஆங்கில மொழி பெயர்ப்பு.

நிகழும் 1936-ம் ஆண்டு கேம்பிரிஜ் யூனியர் லோக்கல் விக்கற் பரீட்சைக்குத் தமிழ்ப் பாடமாக விதிக்கப் பெற்றிருக்கும் அரிச்சந்திர புராணம் மயானகாண்டத்திலுள்ள 136 செய்யுள்கட்கும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிப் போசிரியர்களுள் ஒருவராகிய ஸ்ரீ N. சங்கரப்பிள்ளை அவர்கள் (B. A.) சிறந்த ஆங்கில மொழி பெயர்ப்பு நுட்பமாக எழுதியுள்ளார். அம்மொழி பெயர்ப்பு மேற்படி கல்லூரித் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீ ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளையால் அச்சிடுவித்து வெளியிடப் பெற்றுள்ளது. பிரதியொன்றன் விலை சதம் 30; மயானகாண்டம் மூலமும் உரையும் ஆங்கில மொழிபெயர்ப்பும் ஒருங்குசேர்ந்த பிரதி விலை சதம் 75. ஐந்து பிரதிகளை ஏககாலத்தில் வாங்குவோர்க்கு ஒருபிரதி மேலதிகமாகக் கொடுக்கப்படும். பிரதிகள் மேற்படி பண்டிதரிடத்தும், யாழ்ப்பாணம் ஸ்ரீ சண்முகநாதன் புத்தகசாலை, சுண்டிக்குழி மிஸ்டர் M. பஸ்தியாம்பிள்ளை புத்தகசாலை முதலிய பிரபல புத்தகசாலைகளிலும் பெறற்பாலன.

# சோறு விக்கிச் செத்தாளா

## பிஸ்கால் மனைவி விளக்க மறியல்

## வேலைக்காரக்கன்னி இறந்ததேன்?

### வாவியில் மிதந்த கன்னிகை.

(நமதுசொந்த நிருபர்.)

இற்றைக்குச் சில நாட்களுக்கு முன் மட்டக்களப்பு வாவியில் ஓர் பெண்ணின் பிரேதம் மிதந்தது அப் பிரேதம் மட்டக்களப்பு உதவிப்பிஸ்கால் உத்தியோகத்தரான ஸ்ரீ K. S. சந்திரசேகரம்பிள்ளையின் வேலைக்காரியாயிருந்த சொர்ணமுத்து என்பவளினதே யென்று கண்டுபிடிக்கப்பட்டது.

பிரேத விசாரணை புரிந்த டக்டர் ஷெடி கன்னிகை சோறு விக்கிச் செத்தாள் என்று அபிப்பிராயங் கூறினார். இதன் பின் அப் பிரேதம் புதைக்கப்பட்டுவிட்டது. ஆனால் ஷெடி கன்னிகை கொலைசெய்யப்பட்டாள் என அவளுடையதாய் பொலிசார்க்கும் பொலிஸ் நீதிபதிக்கும் முறைச் செய்ததன் பேரில் சென்ற சனிக்கிழமை புதைக்கப்பட்ட பிரேதம் கிளறியெடுத்து மீண்டும் பிரேதவிசாரணை செய்யப்பட்டது.

விசாரணையின் பின்னர் பொலிஸ் தலைவராகியவர் ஸ்ரீ K. S. சந்திரசேகரம்பிள்ளையின் மனைவி மங்கையர்க்கரசியையும் இன்னும் இருவரையும் சிறையாக்கினார். அவர்கள் இப்போது விளக்க மறியலில் வைக்கப்பட்டிருக்கின்றனர்.

இம்மூவரும் சேர்ந்தே இக்கொலையைப் புரிந்தனர் எனச் சந்தேகிக்கப் படுகிறது.

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம்: யுவஞு மாசிமீ கருவ வியாழக்கிழமை.

## தேர்தற் பேறு.

யாழ்ப்பாணப் பெரும்பிரிவிற்குரி பிரதிநிதித் தானங்கள் நான்கனுள் ஊர்காவற்றுறைத்தான மொன்றிற்கு மாத்திரம் எதிரிடையின்றிப் பிரதிநிதியாக ஸ்ரீ துரைசுவாமியவர்கள்தேர்தல் செய்யப்பட, ஏனைய மூன்றனுள் பருத்தித்துறைப் பகுதிக்கு ஸ்ரீ G. G. பொன்னம்பலமவர்கள சென்ற வாரமும், யாழ்ப்பாணம்-தென்மராட்சி பகுதிக்கு ஸ்ரீ அ. மகாதேவா அவர்கள முந்தநாளும் தேர்தல்செய்யப்பெற்றனர். ஈற்றிலுள்ளதாகிய காங்கேயன்துறைப் பகுதிப் பிரதிநிதித் தேர்தல் இன்று நடைபெறுகின்றது. வடமாகாணத்தின் இன்னொரு பாசமாகிய மன்னர்—முல்லைத்தீவுப் பகுதிக்காகிய தேர்தல் வருகிற மார்ச்மீ 6வ நடைபெறும். தேர்தல் இன்னமும் நடைபெறாப் பகுதிகட்குத் தேர்தல் செய்யப்படும் பிரதிநிதிகளை குறித்து அவ்வச்சமையத்திற் கூறுவேம்.

தேர்தல் செய்யப்பட்ட பிரதிநிதிகளுள் ஸ்ரீ துரைசுவாமி யவர்களை பற்றி அந்தச் சமையத்திற்றனே இப்பத்திரிகையிற் சில கூறியுள்ளோம். இப்பொழுது தேர்தல் செய்யப்பட்டோர் ஸ்ரீ G. G. பொன்னம்பலம், ஸ்ரீ அ. மகாதேவா என்னுமிருவரும் சென்ற ஒன்றரை வருடகாலமாக குறித்த இந்த இரு பகுதிகட்கும் அரசாங்க சபைப் பிரதிநிதிகளாகப் போய்க் கடமை பார்த்தவர்கள். இவ்விருவரும் சென்ற முறையில் ஒரே கொள்கையும் கட்சியும் உடையவர்களாயிருந்தவர்கள். ஆனாலும் காலகதியில் தம் கொள்கையோடும் கட்சியோடும் முழுவதும் ஒட்டிநிற்றலன்றி இடையிடையே பொதுவாகவும் கருமம் ஆற்றிவந்தவர்கள். அவர்கள் சனங்களின் பொருட்டுச் செய்த நன்மை தின்மைகளைச் சனங்கள் அறிவராதலின், யாம் இங்கு எடுத்துச் சொல்லப்புகுதல் மிகையாகவும் விபரீதமாகவும் முடியும்.

போனவைபோக, இப்பொழுது அவர்கள் எந்த முறையில் தேர்தல் செய்யப்பெற்றனரென்பதையும் இனிமேற் கூடவிருக்கும் அரசாங்கசபையிற் புகுந்து அவர்கள் எந்த நோக்கம் கொள்கைகளை அநுசரித்துக் கருமம் ஆற்றப்போகின்றனரென்பதையும் அவதானித்தல் ஆவசியகமாகும். இப்பொழுது நடந்த தேர்தலில் சனங்களிடையே உண்மையான கட்சிபேதம் கொள்கைப்பேதம் இல்லை யெனலாம். தேர்தல்பெற்ற பிரதிநிதிகளின் கொள்கையென்ன வென்பதைக் கூறலாமாவெனின், இக்காலத்து அபேட்சகர்களாய முற்பட்டு வருவோர் எவரும் தாம் பிரதிநிதியாகத் தேர்தல் பெற்றால், அதன்பின், தம்மை யனுப்பியவர்களாகிய ஊரவர் பொருட்டு, அரசாங்கசபையில் எவை யெவை செய்யப்போகின்றார்களென்பதையும் தம் கொள்கை நோக்கம் இன்ன இன்ன என்பதையும் ஒருபோதும் வெளியிடும்வழக்கம் இலராயினர். ஆனால் முந்திய சட்டநிரூபணசபைக்குப் பிரதிநிதிகளாக வருதற்கு அபேட்சித்து நின்றவரேவரும் தங்கள் தேர்தற்கான முயற்சிகளைச் செய்யுங்காலத்தில தங்கள் கொள்கைகள் நோக்கங்களை எழுதி அச்சிட்டுத் தம் கைச்சாத்தோடு ஊரவர்களிடையே பரப்பி வந்தார்கள். அது நன்மைக்கான செயலாயிருந்தது. அபேட்சகர்கள் தங்கள் தங்கள கொள்கைகளை அடுத்தமுறைகளிலேனும் வெளியிடல் வேண்டுமென்று எண்ணங் கொள்ளுதல் வேண்டும். இல்லையேல் இங்குள்ளார் ஈடேறுதல் முடியாது.

இப்பொழுது நிகழ்ந்துவரும் தேர்தலிற் கண்ட உண்மை யாதெனில் அறிவாளிகள் தக்கார் நீதியோடு கூடியவர் குலங்குடியிலுள்ளார் என்னுமிவர்களின் செல்வாக்குச் செல்லா தொழிந்தமையும் இவர்கள் முயற்சி பலியாமற் போனமையும், இலஞ்சம் பெறுவார் மது ரணிசன் ஈனர் தூர்த்தர் முதலியோரின் முயற்சிகள் தீமைகள் அநீதிகள் அநுகூலமடைந்து வருதலுமேயாகும். இந்த டோனமூர் ஆசியற்கொள்கை சிலவருட காலத்திற்குப் பரீட்சார்த்தமாகவே இங்கு அநுசரிக்கப்படுமென்று அதிகாரிகள் அப்பொழுது சொன்னார்கள்; ஆனால் இப்பொழுது யோசிக்குமிடத்து ஆங்கில பரிபாலனமிருக்கும் வரையில் இந்த டோனமூர் ஆசியன் முறை இந்நாட்டைவிட்டுத் தொலைப்போவதில்லை யென்பதும், இந்த நாடு அது தொலையாவரையில் ஈடேறப்போவதில்லையென்பதும் உணரக் கிடக்கின்றன

## சிங்களத் தலைவர்க்கு.

“ஸிலோன் ஸ்பெக்ரேற்றர்” என்னும் பத்திரிகையில் ஆசிரியர் கூற்றாக வெளிவந்த கட்டுரையினை மொழிபெயர்த்து அதன் சாரத்தை இற்றைப் பிரசுரத்தின் பிறிதோரிடத்தில் வெளியிட்டிருக்கிறேம். அக்கட்டுரையினை நம்மவரும் சிங்களத்தலைவரும் ஊன்றிப் படிக்குமாறு அவர்களை வேண்டிக்கொள்ளுகிறேம்.

இலங்கையானது அரசியல் விஷயத்தில் முன்னொருபோதும் இல்லாதவாறு மிகவும் பிற்போக்கான நிலைமையை இப்போது எய்தியிருக்கிறது. இந்த அரசியற் கேவல நிலைமை திருந்தவேண்டுமானால், இலங்கையர் யாவரும் தமது உண்மையான அடிமை நிலையை உணர்ந்து, சுயநல வாஞ்சையைத் தவிர்த்து பரஸ்பரம் ஒற்றுமை பூண்டு ஒழுகவேண்டும் என்று மிஸ்ரர் A. F. மொலமுரே கூறுவதில் அதிகம் உண்மையிருக்கிறது என்பதை நாம் மறுக்கமுடியாது. ஆனால் மிஸ்ரர் மொலமுரேக்கும் மற்றும் சிங்களத்தலைவர்க்கும் நாம் செப்பக்கூடியது ஒன்றுண்டு. டொனமூர் அரசியற்றிட்டம் இங்கேபுகுத்தப்படமுன்னர் வகுப்பு வேற்றுமைகள்வெளிக்காட்டவில்லை; டொனமூர்த் திட்டத்தைச் சிங்களத் தலைவர்கள் அங்கிகரித்து மந்திரப்பதவிகள் ஏற்றபின்னரேயே இவ்வேற்றுமை அதிகப்படலாயிற்று அதற்குக்காரணம் சிங்களத்தலைவர்களின் சுயநலவாஞ்சையும் அதிகாரவெறியுமே என்பதை நீதி நேர்கூடிய சிங்களமக்களே ஒத்துக்கொள்வர்.

“இந்த இலங்கையானது சிங்களர்க்கே உரியது” என்று மிஸ்ரர் குணசிங்காவும், “தமிழரும் ஏனைய சிறுபான்மையினரும் ஒத்துழைத்தால் என்ன, விட்டால் என்ன, சிங்களராய நாம அரசியற் சீர் திருத்தம் பெறுவேம்” என்று கேகாலையில் முழங்கிய சிங்களத்தலைவரும் சிறுபான்மையினர்க்கு அவநம்பிக்கையை ஊட்டியிருக்கின்றனர். இன்னும் பரிபாலன விஷயமாகவும் சிங்களத்தலைவர்கள் தமிழ்மக்களுக்குச் சதா சந்தேகத்தை ஊட்டத்தக்கவிதமாக நடந்து வந்திருக்கின்றனர். சிங்களமக்களின் சுயநலவாஞ்சை அதிகாரவெறி என்பன பருத்தித்துறைப் பகுதியிலும் யாழ்ப்பாணம்-தென்மராட்சிப் பகுதியிலும் நிகழ்ந்த பொதுத்தேர்தற் பிரசாரத்தில் நன்கு எடுத்துக்காட்டப்பட்டிருக்கின்றன. சிங்களத் தலைவர்கள செய்துவந்த செயல்களே ஸ்ரீ மகாதேவா ஸ்ரீ G. G. பொன்னம்பலம் என்பவர்களின வெற்றிக்குக் காரணமாகும். இவ்விருவரது வெற்றியிலிருந்தும்சிங்களத் தலைவர்கள் படிக்கவேண்டிய பாடம் ஒன்று உண்டு: சிறுபான்மையினர் விஷயத்தில் இனியாவது சிங்களமக்கள் தாராள மனது கொண்டு நடத்தல் வேண்டும். அன்றேல், ஒற்றுமை ஒத்துழைப்பு என்பன இலங்கையில் ஒருபோதும் கிடைக்கா.

தமிழ் ஜனத்தலைவர்க்கும் நாம் இது விஷயத்திற் கூறக்கூடியது ஒன்றுஉண்டு; அஃது என்னையோ வெனில் தன் மூக்குப் போனாலும் எதிரிக்குச் சகுனப் பிழையாகட்

## கண்ணோட்டம்.

### ஓர் வார்த்தை.

இன்றுடன் யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கான பிரதிநிதித் தேர்தல் முற்றுப்பெற்றுவிடும். அரசியற் பிரச்சினைகளில் அபிப்பிராய பேதங் கொள்வதுஇயல்பு. அப்படியான அபிப்பிராயபேதம் கேவலம் பகை, தஞ்சம், பழிக்குப்பழிவாங்குங்குரோதம் என்பவற்றில் முடியத்தக்கதாய் வளரவிடவொண்ணுது. வெற்றி தோல்வி ஒருவர் பங்கலல; ஒருவர் வெற்றியடைய மற்றவர் தோல்வியுறவே வேண்டும். இதனால் சுற்றத்தவர் நண்பர் என்பவர்களுக்கிடையே மனக்குரோதம் இருக்கவொண்ணுது என்பதை நாம வற்புறுத்திச் செருட்ட விரும்புகின்றேம். ஜனநாயகக் கொள்கை வளர்ச்சிக்கு அரசியல் விஷயத்தில் அபிப்பிராயபேதம் இருக்கவேண்டியது அவசியம். எனவே, இனி எமக்குள் ஒற்றுமை யிருக்கவேண்டும்: எமது லட்சியம் ஒன்றே; அதாவது நாட்டின் நன்மையே; இந்த இலட்சியத்தைப் பூர்த்தியாக்குதற்கு, நாம் யார் யாரை அரசாங்க சபைப் பிரதிநிதிகளாய்த் தெரிவுசெய்தோமோ, அவர்களுடன் ஒத்துழைத்து, அவர்கள் மேற்கொண்ட தொண்டில் உதவிபுரிய வேண்டும்; இதுவே இச்சந்தர்ப்பத்தில் நம சொல்லத்தக்கதாம்.

### உண்மையில் வருத்தமே.

1915-ம் ஆண்டு தொடக்கம் இலங்கை அரசியல் வானத்தில் நட்சத்திரம் என விளங்கிவந்த மிஸ்ரர் E. W. பெரீரா அவர்கள் இம்முறை நிகழ்ந்த பொதுத்தேர்தலில் தோல்வியுற்றார் என்பது அறிந்து உண்மையில் மனங் கவல்கின்றேம். மிஸ்ரர் பெரீரா ஓர் பழுத்த அரசியல்வாதி; இலங்கையின் முழு நன்மைக்குமாகப் பாடுபட்டவர் அன்றிக் குறுகிய மனப்பான்மைகொண்டு செனநாயக்கா-ஜெயதிலகாக் கோஷ்டியினரைப்போலக் கருமம் ஆற்றவில்லை. அவர் தம்மைத் தெரிந்தனுப்பிய தொகுதியின்பொருட்டு விசேஷமாகப் பாடுபடாதிருந்திருக்கலாம்; ஆனால் அதனைக் காரணமாகக் கொண்டு, அன்னவரைத் தெரிந்தனுப்பாமை ஹொரண வாசிகள் அரசியல்விஷயத்திற் கொண்டுள்ள பிற்போக்கான நிலைமையைக் காட்டுவதன்றி வேறென்ன?

### எங்குப் பரவி.

வலிகாமம் வடக்கில், அரசினர் சென்றவருஷம் மாவரித் திட்டத்தை அநுசரணைக்குக் கொண்டு வந்த பரீட்சித்துப் பார்த்தனர் மாவரியாக 55000 ரூபா அறவிடலாம் என அரசினர் முன்னர் கணிப்பிட்டனர். ஆனால் இப்போது அறவிடப்பட்டிருக்கும் தொகை 77000 ரூபாவாகும். இத்திட்டம் அரசினர்க்கு அதிக வருமானத்தைக் கொடுத்திருக்கின்றதென்றே சொலலவேண்டும். இப்பொது இந்த மாவரி முறையை யாழ்ப்பாணம் முழுவதற்கும் அநுசரணைக்குக் கொண்டுவரும் நோக்கமாக வேண்டிய ஆயத்தங்கள் செய்யப்படுகின்றன என்று தெரியக் கிடக்கின்றது.

டும் என்றபடி கருமம் ஆற்றவொண்ணுது; தமிழர்க்குப் பாதுகாப்புக் கோருவது அதற்காகப்பாடுபடுவது நீதியே; அப் பாதுகாப்புக்களைப் பெற வாதாடவேண்டுமன்றி, அரசியற் சீர்திருத்தத்திற்கு முட்டுக்கட்டையிட வொண்ணுது. அரசியற் சீர்திருத்தத்தின் பொருட்டு பெரும்பான்மையினருடன் ஒத்துழைக்கவேண்டும் என “ஸ்பெக்ரேற்றர்”, உதயதாரகை முதலாம முற்போக்குடைய பத்திரிகைகள் கொண்டுள்ள அபிப்பிராயத்தை யாமும் முன்போல இன்னும் வற்புறுத்தித் தமிழ்த்தலைவர்கட்குத் தெருட்ட விரும்புகின்றேம்.

### கால்களின் விலை 2 லட்சம் பவுண்.

அமெரிக்க சினிமா நடிகையன பேசப் தனது கால்கள் கெட்டுவிடாமல் இருக்க வேண்டுமென்று அவைகளை 2 லட்சம் பவுண்களுக்கு “இன்ஷ்யூர்” செய்திருக்கிறாள். அவள் தனது புன்முறுவல் கெட்டுவிடாமல் இருக்க வேண்டுமென்று 50 ஆயிரம் பவுண்களுக்கு மற்றொரு “இன்ஸ்யூரன்ஸ் பாலிஸியு” மெடுத்திருக்கிறாள்.

### கலியாணவரியால் ரூ 160000 வசூல்

காயர்பூர் சமஸ்தானத்திற்குக் கல்யாண வரிமூலம் 160000 ரூபா வருமானம் வந்தது. சாரதாச் சட்டத்தை மீறும் நோக்கத்துடன் சமஸ்தானத்துக்கு வந்து விவாகம் செய்கின்றவர்களிட மிருந்து விவாகத்திற்கு 200 ரூ. வீதம் வரிவிதிக்கப்படுகிறது. ஒவ்வொரு சம்பந்தியும் 100 ரூபா கொடுக்கவேண்டுமாம். இதிலிருந்துசென்றவருஷம 800 விவாகங்கள சாரதாச் சட்டத்தை மீறி நடந்திருப்பதாக ஏற்படுகிறது.

### பட்சண துலாபாரம்.

எடைக்கு எடை பலகாரம்!

கனம் ஆகாகான் சமீபத்தில் துலாபாரம் செய்து கொண்டார். தமது எடைக்குச் சரியாகப் பொன்னை கொட்டி அதனைச் சிஷ்யர்களுக்கு இனாமாக வழங்கினார்.

இந்த துலாபாரமோகங்கொண்டதால் தான் கஞ்ச் ஓவர்சியர் ஒருவர் தன்னைத்தானே நிறுத்துக் கொண்டார். அவரது எடைக்கு சரியாக மற்றோர்தட்டில் “பட்டாசா” என்ற ஒருவகை பட்சணம் போடப்பட்டது, பட்சணத்தின் மதிப்பு ரூ. 60 தான். மேற்படி “பட்டாசா” பட்சணம் தமது நண்பர்களுக்கெல்லாம் பகிர்ந்தளிக்கப்பட்டது. இதிலிருந்து ஜனங்கள் இந்த ஓவர்சியரை பட்டாசாகான் என அழைக்க முற்பட்டிருக்கின்றனர்.

### தேகவியோகம்

ஸ்ரீமதி அன்னபூரணேஸ்வரிஅம்மாள்

சென்ற வெள்ளிக்கிழமை யிரவு (21-2-36) 4½ மணியளவில் சங்கானை மூத்தகுருக்களென் றழைக்கப்படும் இராமலிங்கக் குருக்களின் பவுத்திரரும், சிவபூசாதுரந்தரரும், வைதிகசீலருமாய் அவ்வூரவர்களின மனங்களிற் புகுந்து வாழ்ந்து, தஞ் சீடர்களுக்கு வேண்டுவன செய்து பெரும் புகழ் படைத்த இராமசேதுக் குருக்களவர்களின் மூத்த மகனும், தென்மராட்சி பூநகரி மன்னர் முல்லைத்தீவுப்பகுதிகளில 33 பாடசாலைகளைத் திறந்து கல்வி மணமில்லா திருந்த தஞ் சீடர்களுக்குச் சைவமணங் கமழச்செய்து நடத்திவரும் பாடசாலைகளின மனேசரும், தபால் ஸ்தானங்கள், தண்ணீர் வசதிகள் வைத்திய சாலைகள் போக்குவரவுப் பாதை வசதிகள் புகைரதப் பாதை வசதிகள் முதலிய அவ்வப்பகுதிகட்குவேண்டியவற்றை அரசாட்சியாரால் நன்குறச் செய்வித்து வைத்தவரும், ஆரியம் செந்தமிழ்ப் பாஷைகளில் இலக்கண இலக்கியங்களை நன்கு கற்றவருமாய பிரமஸ்ரீ இ. குருஸ்சுவாமிக் குருக்கள் அவர்களின் தருமபத்தினியாரும் தன்னுபகரின் குறிப்பின்படி ஒழுகி அவர் செய்யுந் தருமங்கட்குத் தானே பேருபகாரியாயிருந்து நடத்திவந்தவரும், அயலவர் உறவினர் முதலியோர் மெச்சியும் விரும்பி மனங்களிக்க வாழ்ந்துவந்த சர்வகுணசீலி அன்னபூரணேஸ்வரி அம்மாள் தமது 47 வது வயதில் தம் நாயகரும் மக்களும் அயலார் சுற்றத்தவரும் பிரிவாற்றாது வருந்த சிவராத்திரி புண்ணிய காலத்தில் இவ்வுலக வாழ்வை நீத்தனர். இவர்க்கு மூத்த மகனும், இளைய நான்கு குமாரத்திகளும உளர்.

கடித

## 10 கற்பனைகள்.

### வரவேற்பில் ஸ்ரீ துரைசுவாமிக்குப் புத்திமதி.

### சிங்களர்—தமிழர் ஒற்றுமை.

பண்டத்தரிப்பில் திரு. வை. துரைசுவாமியவர்களுக்கு 1'-2-36ல் நிகழ்ந்த வரவேற்பு உபசாரத்தின் போது நொத்தாரிஸ் திரு ச. கந்தையாபிள்ளை அவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவில் ஸ்ரீ துரைசுவாமிக்கு 10 கற்பனைகள் அளித்தார் அவை வருமாறு:—

முதலாவது நாம் ஒற்றுமையின்றியிருந்து சிற்சில நயங்களைப்பெற்றுங் காலந் தள்ளுவதிலும் இலங்கை மக்களென ஒன்றுபட்டு அதன்பேறுகத் தொடக்கத்தில் வரும் சில கஷ்ட நஷ்டங்களை அடைந்தாலும் ஈற்றில் சுபதினம் பெறுவது நல்லது.

இரண்டாவது தமிழராகிய நாம் குறைந்த தொகையினராயினும் உண்மைவழிநின்று தேச நலம் கருதி உழைத்தால் சிங்களவரையும் மறு சாதியாரையும் நம்முடன் ஒத்துழைக்கக் காணலாம். அல்லது ஒத்துழைக்கப் பண்ண முடியும்.

மூன்றாவது கடந்த காலத்தில் நாம் சிங்களவரிலும் கூடிய பல சலாக்கியங்களை அடைந்தமை காரணமாக இனிமேலும் எங்களிலும் 3 மடங்கு கூடிய தொகையினரை அந்த அளவோடு இருக்கவேண்டுமென விரும்புவது நியாயமாகாது. அவர்கள் அப்படி இனி இருக்க மாட்டார்கள்.

நாலாவது நாம் ஆங்கில இராசதந்திரிகளின் கையுட்பட்டு நின்று சிங்களவரை எதிர்த்தாலும் அவர்கள் தமது உரித்தை அடைவதைத் தடுக்க இனிமுடியாது.

ஐந்தாவது தமிழராகிய எங்களைக் கருவியாக்கிப் பேதித்துப் பிரித்து நம்மரசினர் தமது கருமம் ஆற்றித் தமதெண்ணத்தை முடிப்பார்களன்றிச் சிங்களவருக்குப்போகாத பெரிய பெரிய உரிமைகளை எமக்கு வழங்கி எங்கள் எண்ணங்களைப் பூர்த்தியாக்க மாட்டார்களென்றும் பூர்த்தியாக்க முடியாதென்றும் நாம் அறிவோம்.

ஆறாவது நந் தமிழ் மக்கள் இலங்கையின் பற்பல பாகங்களிலும் செய்யும் தொழில் துறைகள் வியாபாரங்கள் ஒற்றுமை ஏற்படாது துவேஷத்தை வளர்த்தால் விருத்தியாக்கமாட்டாதென்றும் நாளடைவில் முறிந்து விடுமென்பதையும் நாம் எண்ணவேண்டும்.

ஏழாவது ஒரு சில உத்தியோகஸ்தரும் செல்லப்பிள்ளைகளும் மாத்திரந்தான் தமிழ்மக்கள் என்று எண்ணும் வரையும் நாம் கடைத்தேற முடியாது.

எட்டாவது சிற்சில துறைகளில் எமமவர்க்கு நஷ்டமாக நடைபெறும் செயல்கள் நாம் ஒன்றுபடாது பிரிந்து நின்றால் அதிகப்படுமன்றிக் குறைபாது.

ஒன்பதாவது இலங்கையின் முன்னேற்றத்தையும் ஒற்றுமையையும் நாடி உழைப்பவர் சிங்களவர் தமிழர் முஸ்லீம்கள் ஆதிய எல்லா வகுப்பினருக்குள்ளும் இருக்கிறார்கள் என்னும் சத்தியத்தை நாமறிவோம்.

பத்தாவது அரியகாரியங்களை ஆற்றுவோர்தாம் பெரியர். இன்று இலங்காதேவியின் மக்களின் ஒற்றுமை ஓர் அரியகாரியம்: ஆனால் முடியாதகாரியமன்று. இவ் வொற்றுமைக்கு உழைத்தல்தான் பெரிய தேசத்தொண்டு.

“செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர் செயற்கரிய செய்கலாதார்” என்றார் நாயனார்.

### சிங்கப்பூர் காலாட்படை பெருக்கப்படும்.

சிங்கப்பூரிலுள்ள காலாட்படை மும்மடங்கு பெருக்கப்படுமென்று இராணுவ அதிகாரிகள் அறிவிக்கின்றனர்.

ஏப்பிரல் மாதம் எகிப்திலிருந்து வரவிருக்கும் சைன்னியம் இயந்திரபீரங்கிப்படையாக அமைக்கப்படும் அதன்பின்னர் மற்றொரு துப்பாக்கிப் படையும் வரும்.

# இற்றலிய — அபிஸீனிய யுத்தம்

## அபிசீனியர் பின்வாங்கியது ஏன்?

### முஸ்ஸோலினியின் அறிக்கை

## நிர்ப்பந்தமுறைகளின் பயன்

**மழை**

ஹராரிலும், ஓகாடன் பிரதேசத்திலும் விடாமல் பெருமழை பெய்துகொண்டு வருகிறது.

**சமரச முயற்சியா**

ஜினிவாவில் பிரஞ்சு மந்திரி மிஸ்டர் பிளாண்டின் புதிய நிர்ப்பந்த முறைகளைப் போதிக்கமாட்டார் ஆனால் பெரும்பான்மையோர் தீர்மானத்திற்கிணங்கி அவர் நடக்க சொல்லுவார்.

இத்தாலிக்கும் மற்ற நாடுகளுக்குமிடையே சமாசம் பேசும்படி டாக்டர் பெனிஸைப் பாப்பாண்டவர் கேட்டுக்கொண்டிருப்பதாக விஷயம் தெரிந்தவர்கள் சொல்லுகிறார்கள். இத்தாலி தன் குறைந்த அக்ஷக கோரிக்கைகளைச் சமர்ப்பிக்கவேண்டுமென்றும் பிறகு தீர்மானப்படி நடக்க வேண்டுமென்றும் டாக்டர் பெனிஸ் கூறியுள்ளார்.

**இத்தாலியர் முன்னேற்றம்**

வடக்குப் போர்முனையில் அம்பா அலகிப்பக்கம் இத்தாலியா முன்னேறியதாக அறிக்கை கூறுகிறது, அபிஸீனியர் இவர்களுக்கு எதிர்ப்பளிக்கவில்லை.

**வெளி நாட்டார் உதவி**

இந்த யுத்தத்தில் வெளிநாட்டார் உதவி குறிப்பிடத்தகுந்ததாயிருக்கிறது. பல வெளிநாட்டார் அபிஸீனிய செஞ்சிலுவைக்கோஷ்டியில் சேர்ந்திருக்க மெலின்ஸ்கி இத்தாலியரால் கைதி செய்யப்பட்டிருக்கிறார்.

**நிர்ப்பந்த முறைகள்.**

இத்தாலியுடன் பிரெஞ்சு வியாபாரம் இப்பொழுது வெகுவாகக் குறைந்துவிட்டது; நிர்ப்பந்த முறைகளே இதற்குக் காரணம். 1935-ம் ஆண்டு ஜனவரி மாதம் பிரான்ஸில் 35000000 பிராங்க பெறுமான இத்தாலியப் பொருள்கள் இறக்குமதியாயின. 1936-ம் ஆண்டு ஜனவரி மாதம் 4000,000 பிராங்கு பெறுமான பொருள்களே இறக்குமதி செய்யப்பட்டன.

**இத்தாலியின் பொறுப்புக்கள்**

நிர்ப்பந்தமுறைகளை ரத்து செய்யும் வரையில் இத்தாலி தன் சாவதேசப் பொறுப்புகளை நிறைவேற்ற மறுக்குமோவென்று பிரான்ஸில் அச்சமேற்பட்டிருக்கிறது. லோகார்னோ ஒப்பந்தத்திற்கு அனுகுணமாகவாவது கடற்படையொப்பந்தத்திற்கு அனுகுணமாகவாவது இத்தாலி கையெழுத்திடாதென்று சொல்லப்படுகின்றது.

இவ்விதத்திற்கு இடமில்லையென்று இத்தாலிய அதிகாரிகள் சொல்லுவதாக ரோமிலிருந்து வந்த செய்தியொன்று கூறுகிறது.

**அரசரைக் கொல்ல முயற்சியில்லை**

அபிஸீனிய சக்கரவர்த்தியைக் கொல்லும் உத்தேசத்துடன் அவரது விமானத்தின் எண்ணெய் டாங்கியில் மணல் போட்டு வைக்கப்பட்டிருந்ததாக வெளியான செய்தி மிகைப்படுத்தப்பட்டதென்று தெரிகிறது. ஜெர்மன் விமானஓட்டியான வேபர் என்பவரிடம் சக்கரவர்த்தி விசேஷ நம்பிக்கை வைத்திருக்கிறார் அவரிடம் பொறாமை காரணமாக மற்ற விமானிகளில் யாரோ ஒருவர் மணலைப் போட்டு வைத்துவிட்டார்கள். ஆனால் வேபர் புறப்படுமுன்பாக டாங்கியில் மணலிருப்பதைக் கண்டுபிடித்துவிட்டார்.

**முஸோலினியின் தந்திரம்**

பிப்ரவரி 12, 13, 14-ந் தேதிகளில் இத்தாலியரின் முன்தீப்புகளும் பீரங்கிப் பிரயோகமும் பலமாக விருப்பதை யறிந்து சில படைப் பிரிவுகளைத் தந்திரத்திற்காகப் பின்வாங்கும்படி தான் உத்தரவிட்டதாக ராஸ் முலுகெட்டா கூறுகிறார். இத்தாலியர் அவர்களைத் தாக்கவே சிறு சண்டைகள் பல நடைபெற்றன. பிப்ரவரி 12-ந் தேதி முதல் 17-ந் தேதி வரையில் 147 அபிஸீனியர் இறந்தனர். 265 பேர் காயமடைந்தனர். இத்தாலியரிடையே பலத்த நஷ்டமேற்பட்டது. 1500 எரிட்ரியர் ஆயுதங்களுடன் இத்தாலியரை விட்டு அபிஸீனியரிடம் வந்து சேர்ந்து கொண்டுவிட்டார்கள்.

**மகாலேயில் வெடிகுண்டு வீச்சு.**

மகாலேயை வெடிகுண்டுகளை வீசி அழித்து விடுவதென இத்தாலியர் உறுதி பூண்டிருப்பதாகக் காண்கிறது 15-ந் தேதி யன்று மகாலேயில் ஏழு குடிசைகள் வெடிகுண்டுகளால் அழிக்கப்பட்டன 16-ந் தேதியன்று கௌரோகினா முதலிய இடங்களிலும் வெடிகுண்டுகள் போடப்பட்டன. பிப்ரவரி 17,18-ந் தேதிகள் நான்கு விமானங்கள் கோரம் நகரில் வெடிகுண்டுகளை வீசின. வெடிகுண்டு வீச்சால் ஒரு ஆடவன் இரு ஸ்திரீகள் ஆகியோர் இறந்தனர். 10 கோவேறு கழுதைகளும் மாண்டன

**இத்தாலியர் முன்னேற்றம்.**

மாகாலிக்கு 22 மைல்களுக்கப்பாலுள்ள அடிராட் என்ற இடம் வரையில் இத்தாலியர் முன்னேறியிருப்பதாக மார்ஷல் படாக்ளியோவின் அறிக்கையொன்று கூறுகிறது. அம்பா அலாகியைப் பிடிப்பது இப்பொழுது இத்தாலியரின் நோக்கம்.

பிப்ரவரி 15-ம் தேதிக்கப்பால் இத்தாலியர் 725 சதுர மைல் பிரதேசத்தைத் தங்கள் வசப்படுத்திக் கொண்டிருக்கின்றனர். மெரிம் ஷிக் பள்ளத்தாக்கில் முக்கியமான ஓரிடத்தை இத்தாலியர் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அம்பா அலாகியை இத்தாலியர் பிடித்துவிட்டதாக ரோமில் வதந்தி இச்செய்தி அதிகார தோரணையில் ஊர்ஜிதம்செய்யப்படவாவது, மறுக்கப்படவாவது இல்லை.

**இற்றலியின் தவிப்பு.**

நிர்ப்பந்த முறைகள் இற்றலிக்கு விரோதமாக விதிக்கப்பட்ட பின்னர், றாமேனியாவில் இருந்து அந்நாடுகளுக்குத் தேவையான பொருள்களை இறக்குமதிசெய்து உபயோகித்து வந்தது ஆனால் றாமேனிய அரசினர் தம் பொருள்களுக்குரிய நிரயத்தை உடனுக்குடன் தங்க நாணயத்திலேயே செலுத்தவேண்டுமென்று வற்புறுத்தி நிற்கின்றனர். இதனால் இற்றலி செய்வதின்னதென்று அறியாது தயங்குகின்றது.

**அபிசீனியர்க்குப் பெரும் வெற்றி.**

டெற்ஜஸ்மாச் அயெலு என்னும் அபிஸீனியத் தளகர்த்தரின் படைகள் சென்ற செவ்வாய்க்கிழமையன்று இரகசியமாக ஓர் இற்றலியக் கோட்டைக்குட் புகுந்து, ஆங்கிருந்த வீரர்களைக் கொன்று, அதனைக் கைப்பற்றினர்.

**விமானங்களின் சேட்டை.**

இற்றலிய ஆகாயவிமானிகள் இப்போதும் சக்கரவர்த்தி இருக்கும் இடத்தைத் தேடித்திரிகின்றனர். சக்கரவர்த்தியைக் கொன்று விட்டால், யுத்தம் நின்று விடும் என்பது அவர்களின் எண்ணமாயிருக்கிறது.

# இந்திய அரசியற் குறிப்புக்கள்.

**சாஹீத்கஞ்சு தகராறு.**

ஜனுப்ஜின்னவை அஸோஷியேடெட் பிரஸ் நிருபர் பேட்டிகண்டு சாஹீத்கஞ்சு தகராறை முடிவுசெய்வதற்காக நடத்தும் ராஜிப்பேச்சு எவ்வளவு தூரம் முன்னேற்றமடைந்திருக்கிறதென வினவியபோது அவர் "வந்தேன் ஜெயிக்கவேன்" என்று ஜூலியஸ்சீசர் சொன்னதுபோல நான் சொல்லவேண்டுமெனத் தாங்கள் எதிர்பார்க்கமாட்டீர்களென்று நம்புகிறேன்" என பதிலளித்தார். சென்றவாரம் ஜனுப் ஜின்னா சாஹீத்கஞ்சு கிளர்ச்சியில் நேராகக் கலந்திருக்கும் முஸ்லீம் தலைவர்களைக் கலந்து பேசி அவர்களது அபிப்பிராயத்தைத் தெரிந்துகொண்டார். பின்னர் அவரை மாஸ்டர் தாராசிங் உட்பட உள்ள சீக்கியத் தலைவர்கள் சந்தித்துப் பேசினர். 3 மணி நேரத்துக்குமேல் இவர்களுள் அந்தரங்கமான சம்பாஷணை நடந்தது; கூட்டத்தில் நடந்தவை மிக்க ரகசியமாக வைத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன.

**மகாத்மாவின் பளிங்கு உருவச்சிலை.**

காக்கிநடா காங்கிரசின் ஞாபகச் சின்னமாக காந்தியின் உருவச்சிலையை ஸ்ரீமதி கஸின்ஸ் திறந்து வைத்து மகாத்மா காந்தி உலகத்திற்கே உத்தம புருஷராய் விளங்குகிறார். இவருடைய வாழ்க்கையும் நடவடிக்கைகளும் உற்சாகத்துடன் கவனிக்கப்பட்டு வருகின்றன. ஒரு பெருந்தலைவரை பெற்றதனால் இந்தியா அதிர்ஷ்டமடைந்து விட்டதென்றும் சொன்னார்.

**காந்திஜீயின் பர்டோலி விஜயம்.**

மகாத்மா காந்தி சென்றவாரம் பர்டோலி வந்து சேர்ந்தார். அவரைக் காண ஆயிரக்கணக்கான பேர் கூடியிருந்தனர். கதர் நூல் மாலைகள் பல அவருக்குப் போடப்பட்டன. மாந்தோப்பு ஒன்றில் போடப்பட்டிருந்த குடிசையில் அவர் நாள் முழுவதும் தாங்கியிருந்தார் அமெரிக்க நீக்ரோ தூது கோஷ்டியினர் பர்டோலிக்கு வந்து மகாத்மாவைக் கண்டுபேசினர்.

**ஹரிஜனங்களுக்கு மந்திர தீக்ஷை.**

சிவராத்திரியை முன்னிட்டு காசிக் கரையில் பண்டாக்களுக் கருகில் மாளவ்யாஜி உட்கார்ந்து அகில இந்திய சநாதன தர்ம மகாசபையின் தீர்மானப்படி ஹரிஜனங்களுக்கும் மற்றவர்களுக்கும் குரு மந்திர உபதேசம் செய்து தூயவாழ்க்கையை நடத்தும்படி வற்புறுத்தினர் எல்லோரும் அமைதியாகத் திரும்பிச் சென்றனர் போலிசார் பிரசன்னமாக இருந்தனர்.

**இந்தியாவுக்கு அபிசீனியச் செய்தி,**

லாகூர் ட்ரிப்யூன் பத்திரிகையின் விசேஷ நிருபர் எதியோப்பிய சக்கரவர்த்தியான ஹெய்லி ஸிலாஸியைப் பேட்டி கண்டு பேசினர். எதியோப்பிய யுத்தம் முடிந்த பின்பு இந்தியாவுக்கு ஒருமுறை விஜயம்செய்ய முடியுமா என்று நிருபர் கேட்டார் இந்த விஷயத்தைப்பற்றி தற்பொழுதிருக்கும் நிலையில் யாதொரு முடிவும் சொல்லமுடியாதென்று சக்கரவர்த்தி கூறினர். மேலும் அவர் சொன்னதாவது:

தேசியப் பாதுகாப்பின் பொருட்டு எங்கள் வருவாய்களெல்லாம் யுத்தத்தில் செலவழிக்கப்பட்டு வருகிறது யுத்தம் முடிந்து எதியோப்பியாவின் கல்வித் திட்டம் புதுப்பிக்கப்படும்பொழுது இந்தியாவுக்கு எதியோப்பிய மாணவர்களைக் கல்வியின் பொருட்டு அனுப்பும் விஷயமாக ஆலோசிக்க நாங்கள் தயாராய் இருப்போம். மேலும் இத்தாலிக்கு பொருளாதார நிர்ப்பந்தத்தை வன்மையாக அனுஷ்டிக்கும், செஞ்சிலுவைச் சங்கத்தார் மூலம் எதியோப்பியாவுக்கு அதிகமான உதவிகளை செய்யும்படியும் சக்கரவர்த்தி நிருபர் மூலம் இந்தியர்களுக்குச் செய்தி விடுத்தார்.

# ஜப்பானில் பெருங் கலகம்.

## இராணுவ அதிகாரிகளின் பதவிமோகம் ஜப்பான் எங்கும் இராணுவ ஆட்சி.

### பலர் சிறை; பலர் கொலை. விவரம் ஒன்றும் தெரியவில்லை.

ஜப்பானிற் பெரும் கலகம் ஒன்று தோடங்கிவிட்டதாக இன்று வந்த தந்திச்செய்திகள் கூறுகின்றன. ஜப்பானிய இராணுவ அதிகாரிகள் அரசியல் நிலையங்களைக் கைப்பற்றித் தமக்கு மாறான கொள்கையுடைய அரசியல் தலைவர்களைக் கொலைசெய்திருக்கின்றனர்.

**பொக்கிஷமந்திரி கொலை.**

கொலை செய்யப்பட்டவர்களில் பொக்கிஷமந்திரியான தக்கஹாஷிப் பிரபுவும் ஒருவராவர் என்று இப்போது நம்பத்தகுந்த இடத்திலிருந்து ஓர் செய்தி கூறுகிறது. இவர் இராணுவத்திற்கு அதிக செலவு ஆகாதென்று வாதித்த கட்சியைச் சேர்ந்தவராவர்.

**இராணுவ ஆட்சி.**

இப்போது ஜப்பான் எங்கும் இராணுவ ஆட்சியாகும் "மாஷல் லா" அமுலுக்கு விடப்பட்டிருக்கிறது.

**மந்திரியின் ஸ்தானம்.**

ஜப்பானியப் பிரதம மந்திரியின் தலைமை ஸ்தானத்தைக் கலகம் செய்யும் இராணுவ அதிகாரிகள் கைப்பற்றிவிட்டனர் தந்தி டெலிபோன் நிலையங்கள் யாவும் சீர்குலைக்கப்பட்டபடியால், ஜப்பானிய நிலைமையைப் பற்றிய முழுவிபரங்களும் அறியமுடியவில்லை.

**80 பேர் இறந்தனர்.**

ஜப்பானில் நிகழ்ந்து வரும் இக்கலகத்தில் 80 பேர் கொல்லப் பட்டனர். இவர்களில், ஜப்பானியப் பிரதம மந்திரி, சக்கரவர்த்தியின் அந்தரங்க காரியதரிசி, யுத்தக் கல்வித் தலைமைப் பரிசோதகர் என்பவர்களும் சேர்ந்தவர்களாகும்.

**காரணம் என்ன?**

பழைய தலைவர்கள் ஜப்பானைப் பிற்போக்கான நிலைமைக்குக் கொண்டுபோய்விட முயற்சி செய்கின்றனர்; இக்கேவல நிலைமையில் இருந்து எமதுநாட்டைப் பாதுகாத்தற்காகவே இக்கலகத்தை ஆரம்பித்தோம் என்று கலகக்காரர்களான வாலிபர்கள் கூறுகின்றனர்.

**பேசும் பத்திரிகை.**

ஆர்ஜண்டையின் என்ஜினியரான பெர்னண்டோ க்ருடோ என்பவர் "போடோ லிப் டோ போரோ" என்ற பேசுங் காகிதத்தை செய்ய ஒன்பது வருட காலமாக ஆராய்ச்சி செய்துவந்தார். கடைசியாக அவரது ஆராய்ச்சி வெற்றி பெற்றுவிட்டது. இக்காகிதத்தை லண்டனில் பல ரேடியோ எஞ்ஜினியர்கள் அடங்கிய கூட்டத்தில் ஒப்பித்துக் காட்டினர். இக்காகிதம் பார்வைக்கு கிராமபோன் ரிக்கார்ட்டுகளைப் போல் காகிதத்தில் செய்யப்பட்டிருக்கிறது காகிதத்தில் எழுத்துக்களை எழுதுவதற்குப் பதிலாக ஒலியை மையினால் பதிவுச் செய்யப்படுகிறது. அவ்வொலியானது மறுபடியும் செவியாய் கேட்கிறது குறைந்த செலவில் தேய்ந்துபோகாமல் எப்பொழுதும் சாசுவதமாகவே இருக்கிறது இந்தக் காகித ரிக்கார்ட்டில் ஒளியின் கதிர்கள் விழும்பொழுது ஒலி உண்டாகிறது.

**மலாயாவில் இந்தியர்களுக்குத் தடை**

ஸ்ட்ரெயிட்ஸ் டைம்ஸ்பத்திரிகை சீனா, இந்தியா, இலங்கை முதலிய தேசங்களிலிருந்து நடுத்தரக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் வேலைக்காக மலாயாவுக்கு வருகிறார்களென்றும், மலாய் நாட்டினர் மற்ற நாட்டினரைப் பின்பற்றவேண்டுமென்றும், கூலிகள் தொழிலாளர்கள், யாத்திரிகர்கள் தவிர மற்றவர்களை மலாயாவில் அனுமதிக்கக் கூடாதென்றும் எழுதியிருக்கிறது.

**கால நிலை.**

சென்ற செவ்வாய்க்கிழமை இங்கே ஒரு பாட்டம் மழை பெய்தது. இன்றும் பெருமழை பெய்தது. அரிவி வெட்டுஞ் சமையம் இதுவாதலால் இம் மழையாற் கமக்காரர் கஷ்டப்படுகின்றனர். அல்லாமலும் மாசி மழை விரும்பப்படுவதல்ல.

**கல்கத் தாவில் 4000 பிச்சைக் காரர்.**

கல்கத்தாவில் மொத்தம் 4000 பிச்சைக் காரர்களிருக்கின்றனர். இவர்களில் 400 பேர் குருடர்கள், 1000 பேர் குஷ்ட நோயாளிகள், 600 பேர் இதர வியாதியினால் பீடிக்கப்பட்டவர்கள். மீதியுள்ள 2000 பேர்கள் நல்ல தேக நிலைமையுடனிருப்பவர்கள்.

**20 ஆயிரம் வருஷங்களுக்கு முன் எழுதிய வர்ண சித்திரங்கள்.**

ராய்கார் சமஸ்தானத்தில் நகர் பாலிஸ்தானத்திற்கு 11 மைல் மேற்கே காப்ராபகடு, சிங்கப்பூர் குன்றுகள் இவற்றில் குகைச் சித்திரங்கள் சில கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன. இவை 10 ஆயிரம் அல்லது 20 ஆயிரம் வருடங்களுக்கு முன்பு எழுதி வர்ணந்தீட்டப்பட்ட சித்திரங்களைப் போல் காணப்படுகின்றன. இவை சமீபத்தில் பிரான்ஸ், ஸ்பெயின், இத்தாலி போன்ற தேசங்களிலும் காணப்படும் குகைச் சித்திரங்களைப்போல் காணப்படுகின்றன. எருது காட்டெருமை மான் வேட்டைக் காட்சி இவை பற்றிய சித்திரங்கள் எல்லாம் இங்கும் அயல் நாடுகளிலும் இருக்கின்றன. இதனால் சரித்திர காலத்திற்கு முற்பட்ட காலத்தில் உலகின் பல பாகங்களிலும் ஒரே மாதிரியான ஜனங்கள் ஒரே கலா ஞானம் நாகரிகம் இவற்றுடன் வாழ்ந்து வந்ததாகத் தெரிய வருகிறது.

**பாராளுமன்றத்தில் மலேரியாக் கேள்வி.**

சென்ற வாரம் நிகழ்ந்த பாராளுமன்றத்துக் கூட்டத்தில் மிஸ்ரர் பிளேச்சர் என்பவர் இலங்கையில் மலேரியா நோய் தாண்டவமாடியதைப்பற்றிச் சில கேள்விகள் கேட்டார்:—அவை வருமாறு:-

1 இலங்கையில் இப்போது மலேரியின் நிலை என்ன?

2 அது இனியும் வராமல் தடுப்பதற்கு எடுத்த நடவடிக்கைகள் யாவை?

3 மலேரியா அங்கே இனியும் தோற்றுமா?

குடியேற்ற நாட்டு மந்திரியான மிஸ்ரர் J. H. தோமஸ் பின்வருமாறு விடையளித்தார்.

1 1934-ம் ஆண்டு நவம்பர் மாதம் தொடக்கம் 1935-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரையில் 59,144 பேர் மலேரியாவினுல் இறந்திருக்கின்றனர்.

2 மலேரியா நோயைத் தவிர்க்கும் முறைகள் என்ன என்பதைப்பற்றி ஆராய்ச்சி செய்து Col. கில் என்பவர் ஓர் அறிக்கை விடுத்திருக்கிறர். இந்த அறிக்கை மந்திரசபையினரால் நன்கு பரிசீலனை செய்யப்பட்டது. மந்திர சபையினர் ஏற்ற நடவடிக்கைகளை எடுத்திருக்கின்றனர்.

**பலாங்கொடைத் தேர்தல் முடிவு:**

பலாங்கொடைத் தேர்தல் முடிவு நேற்று வெளியிடப்பட்டது. இதுகாறும் அப்பகுதிப் பிரதிநிதியாயிருந்த மிஸ்ரர் T. G. ஜெயவர்த்தன தோல்வியடைய மிஸ்ரர் H. A. குணசேகர என்பவர் வெற்றியடைந்தார்.

**தும்பாரையில்**

தும்பாரைப் பகுதித் தேர்தலில் மிஸ்ரர் A. ரதிநாயக்கா என்னும் பழைய பிரதிநிதியே மீண்டும் தெரிவு செய்யப்பட்டார்.

## போன உயிரை மீட்கலாம்.

### ருஷியஞானி கண்டுபிடித்தார்

சோவியத் சாஸ்திர ஞானிகள் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் சில ஆச்சரியமான பல விஷயங்களை கண்டுபிடித்திருக்கின்றனர். ஆயிரக் கணக்கான வருஷங்களுக்கு முன்பனியில் விறைத்துச் செத்துப் போன பிராணிகளை 20 அடி ஆழத்திலிருந்து தோண்டியெடுத்து அவற்றிற்கு உயிரை மூட்டினர். சாதாரண உஷ்ணத்தில் அவை மறுபடியும் ஜீவனைப் பெறுகின்றனவாம்.

டாக்டர் ராக்ப்வில்வார்ட் என்பவரின் ஆராய்ச்சிக்கு இவ்விஷயங்கள் பொருத்தமாக விருக்கின்றன. நோய்க்குக் காரணமான கிருமிகள் தேகத்திலிருக்கின்றன. அந்தத் தேகத்தை விறைக்கச் செய்தால் அக்கிருமிகள் இறந்துவிடும். பிறகு தேகத்தில் உயிரைக்கொண்டு வந்து விடலாம் என்பது அவருடைய சித்தாந்தம்; மூன்று குரங்குகள் விஷயத்தில் அவர் இப் பரீட்சையைச் செய்தார். ஒரு குரங்குக்கு உயிர் வந்தது. ஒன்றுக்கு உயிர்வரவில்லை. மற்றொன்று இன்னும் பனிப்பெட்டியிலிருக்கிறது. நோய்க்கிருமிகள் சாகும் வரையில் மனிதர்களையும் விறைக்கச் செய்து பிறகு உயிரை மூட்டலாமென்பது அந்த டாக்டரின் நம்பிக்கை.

## இன்னொருவர் மரணம்.

மாத்தளைத் தெரிவில் காயப்பட்டவர்களில் இன்னொருவர் இறந்தார். எனவே எல்லாமாக மரணமடைந்தவர் தொகை இப்போது 6 ஆகிறது

## கொக்குவிலில் தீவிபத்து.

கொக்குவில் சைவாங்கில கலாசாலையில் இன்றுகாலை எட்டரை மணியளவில் ஓர் தீவிபத்து ஏற்பட்டது: கிடுகினால் வேயப்பட்டுள்ள கலாசாலைக் கட்டிடத்தின் கூரையின் சிலபாகம் அக்கினிக் கிரையாயிற்று. பேராபத்து நிகழுமுன் தீ அணைக்கப் பட்டது. இவ்விபத்திற்குக் காரணம் என்னவென்பது தெரியவில்லை.

## பெண்ணை அடித்தாராம்.

சென்ற 26-2-36 புதன்கிழமை யாழ்ப்பாணம் பொலிஸ் கோட்டில் மானிப்பாயில்வசிக்கும் இராமுபெண் செல்லம்மாவை அவ்வூர் வீரசத்தி காசியன் என்பவன் சென்ற 18ம் திகதி இரவு 7 மணியளவில் பொல்லால் அடித்துப் படுகாயப்படுத்தியதாக வழக்குத் தொடரப்பட்டது வழக்கு 29ம் திகதிக்குத் தவணையிடப்பட்டது.

## கல்லால் குத்திக் காயப்.

சென்ற 26-2-36 புதன்கிழமை யாழ்ப்பாணம் பொலிஸ்கோட்டில் ஆவரங்காலில் வசிக்கும் முருகன் இளையவன் என்பவனை அவ்வூர் (1) கட்டையன் பூதன், (2) ஆழ்வான சடையன் (3) கந்தன் முருகன் ஆகிய மூவரும் சென்ற 10ம் திகதி 8 மணியளவில் ஓர் கல்லால் தலையிற் குத்திக் காயமுண்டாக்கினர் என்று வழக்குத் தொடரப் பட்டது. வழக்கு வருகிறமாசம் 24ம் திகதிக்கெனத் தவணையிடப் பட்டது.

## அடைவுநகை விற்பனவு

யாழ்ப்பாணம் பறங்கித்தெரு 2ம் குறுக்குத் தெருவிலிருக்கும் B. P. நிக்கலஸ் அன்சன்ஸ் மனேஜர் S. P. யோசேப் அவர்களிடம் 30-9 34 தொடக்கம் 28-2-35 வரையில் வைக்கப்பட்ட அடைவுநகைகள் தவணைதப்பியபடியால் 1936-ம் ஆண்டு மார்ச்சு மீ 21ந் திகதி சனிக்கிழமை காலை 10 மணியளவில் மேற்படி இடத்தில் பிரசித்த ஏலத்தில் விற்பனவு செய்யப்படும் என்பதை அறிவிக்கிறேன்.

கோணமலை ஐயாத்துரை
வெகதீஸ்வேந்தர

யாழ்ப்பாணம்
26 - 2 - 36.
Mis 258
27 - 2 2 - 3 - 36

## உலகம் பலவிதம்.

தேவர்களும் அசுரர்களுங் கூடிப் பாற்கடலிற் கடைந்து எடுத்த அமிர்தத்தை அசுரர்கள் உண்ண விடுதற்குத் திருமாலுக்குஇஷ்டமில்லை தேவர்கள் மாத்திரம் உண்ணல் வேண்டுமென்பதே நாராயணமூர்த்தியின் விருப்பம். அசுரர்கள் தேவர்களைக் காட்டிலும் வலியவர்களாதலால் இருபாலர்க்கும் மாறுபாடு நேரில் அசுரர்கள் தேவர்கட்கு அகர்த்தத்தைச் செய்து அமிர்தத்தையும் அவர்களிடத்தி லிருந்து கவர்ந்து கொள்வார்க ளென்பது மாயவனுக்குத் தெரியும். இவைகளையெல்லாம உத்தேசித்து மாயவமூர்த்தி ஒரு உபாயஞ் சூழ்ந்தார்; தன்னுடைய ஏமழகைக் கண்டு பெண்பாலர் தாமும் ஆசைப் படத்தக்க ஒரு மோகினி வடிவம் பூண்டு ஒரு கையில் அமிர்த கலசத்தையும் மற்றக் கையில் ஒரு சட்டுவத்தையும் பரித்தவளாய்த்தோன்றி "ஏ, தேவர்களே! அசுரர்களே! உங்கட்கு, அமிர்தம் வேண்டுமோ, மோகினியாகிய என்னை வேண்டுமோ' என்று கேட்டார் அது மாயவனுடைய மாயம் என்பதைத் தம ஞானத்தினால் உணர்ந்த அமரர் தங்களுக்கு அமிர்தமே வேண்டும் என்றனர். ஞானமற்றவர்களாகிய அசுரர்கள் 'எங்களுக்கு அமிர்தம்வேண்டாம்! பெண்ணாமுதே! நீயே வேண்டு" என்று ஓடி வந்து மோகினியைச் சூழ்ந்து கொண்டார்கள்.

* * *

மாயமோகினி அமிர்தத்தைத் தேவர்கட்குப் பகிர்ந்து கொடுத்துவிட்டு, அசுரரைப் பார்த்து "உங்களுள் எவன் எல்லாரைக் காட்டிலும் பராக்கிரமசாலியோ, அவனுக்கே நான் உரியவள்" என்று உபாயமாகச்சொன்னாள்; அதனைக்கேட்ட அறிவிற் குறைந்தவர்களாகிய அசுரர்கள் தங்களுக்குள் ஒருவரோடு ஒருவர் தனித்தனி தம் பராக்கிரமத்தைக் காட்ட முயன்று, மாறுபட்டுச் சண்டையிட்டு எல்லோருமாளவே, விஷ்ணுமூர்த்தியும் தாங்கொண்ட மோகினி வடிவத்தை ஒழித்துச்சுவய வடிவத்தோடுதேவர்கட்கு அருள் புரிந்தாரென்பது புராணசரித்திரம்.

* * *

இலங்கை மக்கள் இற்றைக்குப் பல வருடங்கட்குமுன் தங்கட்குச் சுவதந்திரம் வேண்டுமென்ற கொள்கை பூண்டவர்களாய் அரசினருக்குத்தங்கள் நியாயங்களைத் தெருட்டி வந்தார்கள். ஆனால் அரசினர் அவர்கள் கேள்வியின்படி நடக்க இஷ்ட மில்லாராய், டொனமூர் விசாரணைச் சங்கமென்றை ஏற்படுத்தி விசாரணை முடிந்தபின் டொனமூர்த் திட்டத்தை அங்கீகரித்து இந்தப் புதிய அரசாங்க சபைத் தேர்தல் முறைகளை இங்கே அநுசரிக்கலாயினர். ஆரம்பத்தில் இப் புதிய முறைகட்கும் கொள்கைக்கும் இலங்கைமக்களனைவரும் மாறுபாடாகவே நின்றார்கள். யாழ்ப்பாணமக்கள் இக் காரணம் பற்றி அரசாங்கசபையைப் பகிஷ்காரஞ்செய்தனர். சிங்களரும் ஒழிந்த தமிழரும இலங்கையிலுள்ள ஏனைய சாதியினரும் ஆரம்பத்தில் வெறுப்புக் காட்டினரேனும்பின்னர் டொனமூர் அரசியற்றிட்டத்தை அநுசரித்துப் பிரதிநிதிகளாக அதற்குட் புகுந்தனர். இரண்டு இரண்டரை வருடஞ்செலலயாழ்ப்பாணத்துள்ள தமிழ் மக்களுள் ஒருசாரார் அதனைக் கட் போய்ப் புகுந்தனர். இந்த முறை நடந்த தேர்தலில் தங்கள் வெறுப்பைக் காட்டிக் கொள்ளுப அறிகுறியாய் முந்திய முறை பகிஷ்கரித்தவர்களுள்பட இங்குள்ள தமிழர்கள் எல்லாரும் பங்குபற்றினர்.

* * *

டொனமூர் அநுசரணைக்கு வந்தபின் இலங்கை மக்களனைவரும் தங்கள் மேலான நோக்கமாகிய சுயராச்சிய வேட்கையை விடுத்து அமிர்தத்தை வெறுத்த அசுரர்கள் மோகினியின் பொருட்டுப் பரஸ்பரம் மாறுபட்டு மாண்டவாறு, இவர்களும் சாதிபேதம் பாராட்டிய பெரிதும மாறுபட்டதோடு மாத்திரம் நில்லாது தங்களுள்ளும் மாறுபாடு கொண்டனர்.

* * *

இனி, கற்றூர் கல்லாதார் சிறியார் பெரியார் அறிவுடையோர் மடமார்

## செல்வருக்கு வரி.

### வறியார் சுபீட்சமடைய மார்க்கம்.

### ஆகாகானின் மொழிகள்.

சென்றவாரம் முஸ்லீம் தலைவராகிய நவாம் ஆகாகான் அவர்களை "அஸோஸியேற்றட் பிரஸ்" நிருபர் பேட்டிகண்டு, இந்தியப் பொருளாதாரப் பிரச்சினை சம்பந்தமாக வினவியபோது அவர் பின்வருமாறு கூறினார்.

"இங்கிலாந்திலே செல்வர், வறியர் என்ற பிரச்சினை இருப்பதுபோல இங்கேயில்லை என்பது உண்மை; ஆனால் இங்கே வரி விதிக்கப்படும் முறையை மாற்றியமைத்தல் வேண்டும் என்று நான திடமாகக் கூறுவேன். பணக்காரரானவர்கள் நட்டின் நலம் கருதித் தியாகம் செய்ய வேண்டும்: அவர்களின் பணம் நாட்டு நன்மைக்காகச் செலவு செய்யப்படல் வேண்டும்.

"வறியவர்மீது வரி விதிக்கப்படலாகாது; செல்வர்க்கே வரி விதிக்கவேண்டும்."

## யாழ்ப்பாணம் சுப்பிறீங்கோடு.

சென்றகிழமை யாழ்ப்பாணம் சுப்பிறீங்கோட்டில் வரணியைச் சேர்ந்த கரம்பக்குறிச்சி என்னுமிடத்தில் (1) S. கந்தன், (2) V. கந்தன், (3) V. சின்னத்தம்பி, (4) N. வேலன், ஆகியவர்கள் V. வல்லி கந்தனைக் கொலைசெய்த வழக்கு விசாரிக்கப்பட்டு 1-ம், 2-ம் எதிரிகட்கு தனித்தனி 10-வருஷசிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

## 12000 பேரின் தவிப்பு.

செவில் என்னும் தேசத்தில் ஓர் ஆற்றிலிருந்து வெள்ளப் பெருக்கு ஏற்பட்டமையினால் 12000 பேர் வீடு வாசல் இன்றித் தவிக்கின்றனர். அனேகர் வெள்ளத்தில் அமிழ்ந்தி இறந்தனர்.

ஆண்கள் பெண்கள் கல்லார் பொல்லார் என்ற பேதமின்றி எல்லாரும் சம்மதஞ் சொல்லலாமென்ற இந்த ஒரு கொள்கையே இலங்கை மக்களுக்குப் பெருங் கேடாக விளைந்தது இந்தத் தேர்தல்முறை இந்தியாவிலும் ஏனைய குடியேற்ற நாடுகளிலும் இல்லாததாகும். சீர் திருந்திய இங்கிலாந்திலும் இந்தத் தேர்தல் முறை இற்றைக்கு இருபது இருபத்தைந்து வருடந் தொடக்கமாகவே நடைபெற்று வருவதாகும். அந்தத் தேர்தல்முறை இலங்கை மக்களுக்கு இப்போதைக்குத் தகாததெனவும் அதனாற் பல கெடுதிகள் நேருமென்றும் எல்லாரும் சம்மதஞ் சொல்வதைக் காட்டிலும் மிருக்கன் மார்த்தடிகள் சம்மதஞ் சொல்ல இயலுமென்றும் சொல்வது நல்லது என்றும் அரசியல்ஞானம் பழுத்த பெரியாராகிய லோர் இராமநாதனவர்கள் அந்தச் சமையத்தில் ஓலமிட்டனரல்லவா? அவர் போன்ற பெரியார் சொல்லும் பழுதாகுமா? பொய்யாகுமா? இந்த தேர்தல் முறையினாலே வந்துள்ள அநர்த்தம கொஞ்சமல்லவே!

* * *

சென்றவாரத்தொடக்கமாகவுள்ள தேர்தல் அநுபவத்தைக் கண்டு கொண்டும் இன்னமும் இத் தேர்தல் முறையால் நன்மையுண்டென்று நாம் சொல்ல நா எழுமா? பணமும் மதுபானமும் ஒரு புறம் வேலை செய்ய, கட்டாமட்டித்தனமும் ஈனசெயல்களும் இன்னொரு புறமாக வேலை செய்ய, தாங்கள் சொல்லும் சம்மதம் என்ன தேவைக்கு என்று அறியாதார் சம்மதஞ் சொல்ல, அறிவாளிகள், பெரியார், விஷயந் தெரிந்தோர் என்னுமிவர்கள் முற்பட்டு எதும் முயற்சிசெய்ய முடியாதாக, ஈற்றில் அடிபிடி சண்டை கத்திவெட்டு பொல்லடி துப்பாக்கிச்சூடு,கோசலமு அந்தோ! கொலையென்னு மிவைகளும் வந்து நேர்ந்தனவே! பிரதிநிதித் தேர்தலில் இன்னும்பாதித் தேர்தல் முடியவில்லை; எஞ்சியபாகம் முடிவதற்கிடையில் என்ன என்ன உற்பாதங்கள் அநர்த்தங்கள் நேருமோ யாம் அறியோம்!

## அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

1893-ம் ஆண்டின் 8ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி லைசென்ஸ் பெற்று அடைவுபிடிக்கும் யாழ்ப்பாணம் க. செ. த. செ கடையில் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணை தப்பி மேற்படி சட்டத்தின் 12ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்பட வேண்டிய நகைகளின் விபரம்:-

| நம். | தே. | ரூ. | ஊர் பெயர் நகைவிபரம். |
| --- | --- | --- | --- |
| | | | 1933ம் ஆண்டு செப்டெம்பர் மாசம் |
| 1233 | 1 | 55 | வட்டுக்கோட்டை நன்னித்தம்பி அய்யாத்துரை சாதா செட்டிக் காப்பு சோடி ½ சொப்பு 1 |
| | | | 1934ம் ஆண்டு பெப்ரவரி மாசம் |
| 2645 | 7 | 13 | சுன்னாகம் கனகர் பொன்னுத்துரை சாதா மோதிரம் 1 |
| 2755 | 20 | 11 | பாசையூர் சவுரியல செல்லையா இமிசிகல் வைத்த கடுக்கன் சோ. 1 |
| | | | மார்ச்சு மாசம் |
| 2879 | 9 | 140 | நல்லூர் சுப்பிரமணியம் செல்லையா திருகாணி இல்லாத முருக்கங் குத்தி சோடி 1 |
| 2991 | 26 | 100 | நல்லூர் சுப்பிரமணியம் செல்லையா இமிசிகல் டிம்பி பதக்கத்துடன் டைமன் அட்டியல் 1 |
| | | | ஏப்ரல் மாசம் |
| 29 | 4 | 10 | ஆவரங்கால் ஆசம்பாவா அகம்மது லெப்பை செளிவு 1 பக்கம் மூடி இல்லாத முக்கப்புக்கு இமிசிகல் வைத்த தாயத்து 1 |
| | | | மே மாசம் |
| 300 | 9 | 48 | நவாலி தெற்கு யக்கோ சவுரியல் சாதா டிம்மியுடன் செளிவு கம்பிப் பூரான் அட்டியல் 1 |
| | | | ஜூன் மாசம் |
| 759 | 28 | 90 | கொக்குவில் கிழக்கு சின்னத்தம்பி பொன்னையா இமிசிகல் வைத்த தாயத்து 1ம் ஆப்பிரிக்கா முளைப்பவுண் 1 கோர்த்த குண்டுச்சங்கிலி 1 |
| | | | ஜூலை மாசம் |
| 839 | 8 | 10 | சுன்னாகம் வயிரவி துரை இமிசிகல் வைத்த பதக்கம் 1 |
| 917 | 17 | 10 | அச்செழு சின்னத்தம்பி செல்லையா பளுத்த சிரு மோதிரம் 1 |
| 1035 | 31 | 10 | வல்வெட்டி சுப்பையா சபாபதிப்பிள்ளை கல் 1 இல்லாத இமிசிகல் பதக்கம் 1ம் மேற்படி கல் காதோலைசோடி 1 |
| 1314 | 29 | 10 | நீர்வேலிவடக்கு மூத்ததம்பி தம்பையா இமிசிகல்வைத்த மோதிரம் 1 |
| 1320 | 30 | 18 | மண்டதீவு சின்னையா கார்த்திகேசு 1க்கு திருகாணி இல்லாத இமிசிகல்வைத்த சிருசு பெருசு காதோலை சோடி 2 |
| | | | செப்டெம்பர் மாசம் |
| 1392 | 7 | 16 | நயினாதீவு முருகேசு மாணிக்கம் இமிசிகல் பதக்கம் 1 |
| | | | அக்டோபர் மாசம் |
| 1719 | 4 | 25 | தெல்லிப்பழை பொன்னம்பலம் சதாசிவம் இமிசிகல்வைத்த சிறு புரோச்சு 1ம் 1க்கு திருகாணி இல்லாத லை கல் காதோலை சோடி 1 |
| | | | நவம்பர் மாசம் |
| 2000 | 2 | 30 | புத்தூர் மேற்கு சரவணமுத்து கனகரெத்தினம் இமிசிகல்வைத்த கவுத்தோர் 1ம் சாதா சிரு மோதிரம் 1 |
| 2035 | 4 | 22 | சுன்னாகம் கனகர் பொன்னுத்துரை சாதா சிருசு பெருசு மோதிரம் 2 |
| 2215 | 21 | 90 | வீ காளியம்மன்கோவிலடி ஆறுமுகம் செல்லத்துரை முகப்புக்கு இமிசிகல் வைத்த பூ காப்பு சோடி 1 |
| 2226 | 23 | 135 | புத்தூர் மேற்கு மயிலு சிவகரப்பிள்ளை திருகாணி கல் 2 இல்லாத இமிசிகல் டிம்பி பதக்கத்துடன் செட்டிப்பூரான் அட்டியல் 1 |
| | | | டிசம்பர் மாசம் |
| 2425 | 17 | 17 | வெள்ளாந்தெரு நாகமணி செல்லத்துரை இமிசிகல்வைத்த காதோலை சோடி 1 |
| 2477 | 20 | 32 | நல்லூர் சுப்பிரமணியம் செல்லையா சாதா மூங்கில் காப்பு சோடி 1 |
| 2557 | 31 | 15 | நீராவியடி ஆறுமுகம் இராமலிங்கம் 1 திருகாணி இல்லாத இமிசிகல் வைத்த காதோலை சோடி 1 |

விற்பனவு யுவவருஷம் பங்குனிமீ 2ந் திகதிக்குச் சரியான (14-3-36) சனிக்கிழமை காலை 10 மணி தொடக்கம் மேற்பட்டநகை பிறகேலாக மீதி மேற்படி கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

சி. ஐயம்பிள்ளை உடையார்
வெந்தில் மேஸ்தர்

(Mis. 283. 27 2 & 2-3-36.)


# வெளிவந்து விட்டது!

# தஞ்சை வாணன் கோவை

## சொக்கப்ப நாவலருரை

பல்வகை ஆராய்ச்சிக் குறிப்புக்களுடன்.

(வித்துவான் பரீக்ஷை [மதுரைத் தமிழ்ச்சங்கப்] பாலபண்டித பரீக்ஷைகட்குப் பாடமாக நியமிக்கப்பட்டுள்ள இலக்கியம்.)

இப்பதிப்பு, சென்னைச்சர்வகலாசங்கத்தாரால் வித்துவான் பட்டம் வழங்கப் பெற்றவரும், யாழ்ப்பாணம் — ஆரியதிராவிட பாஷாபிவிருத்திச்சங்கத்துப்பரீக்ஷகரில் ஒருவரும் ஆகிய சிதம்பரம் ஸ்ரீமத் ந. சுப்பையபிள்ளை அவர்களால் பல ஏட்டுப் பிரதி கொண்டு திருத்தம் பெற்றது; பல்வகை ஆராய்ச்சிக் குறிப்புரை, நூலாசிரியர் உரையாசிரியர் வரலாறு, விஷயசூசிகைமுதலாயின சேர்க்கப் பெற்றது. யாழ்ப்பாணம் - சைவபரிபாலனசபையாரால் அச்சிட்டு வெளியிடப் பெற்றது. "பெதர்வெய்ட்" பேப்பர் "டெமி" எட்டுப்பிரமாணங் கொண்ட 400 பக்கங்களை உடையது.

விலை: (காலிகோ பயிண்டு) ரூபா. 3 அணா 8.
„ (சாதா „ ) „ 3 —

தபால் (பார்சல்) சார்ஜ் { இலங்கை-இந்தியாவுக்கு அணா—4. மலாய்நாடு முதலியவற்றிற்கு „ —6.

வியாபாரிகளுக்கும் ஆசிரியர்களுக்கும் விசேஷ கமிஷன்கொடுக்கப்படும். பெறவிரும்புவோர், பின்வரும் விலாசத்திற்கு எழுதுக.

மானேஜர்,
"இந்துசாதன" ஆபீஸ்,
யாழ்ப்பாணம்.

# தெரிவின்பின்னர் ஐவர் மாணம்.

## ஆத்திரங்கொண்டவனின் துப்பாக்கிச்சூடு மாத்தளைத் தெரிவிற் கோரசம்பவம்

## வெற்றிபெற்றவர்க்குக் காயம்!

(நமது சொந்த நிருபர்)

சென்ற திங்கட்கிழமை மாத்தளைப்பகுதித் தெரிவில் தோல்வியடைந்த கட்சியைச்சேர்ந்த ஓர் போட்டாச்சாரதி ஆத்திரங்கொண்டு துப்பாக்கியினல் ஐவரைக் கொன்று பலரைக் காயப்படுத்தினன். என்றுசொல்லப் படுகிறது.

இத்தொகுதிக்கு இதுகாறும் மிஸ்டர் W. T. B. கரியலாடை என்பவரே பிரதிநிதியாயிருந்துவந்தார். இம்முறைப் போட்டியில் மிஸ்டர் B. H. அலுவிகாரை என்னும் வாலிப பரீஸ்டர் அவர்க்கு எதிரிடையாயிருந்தார்.

மிஸ்டர் கரியலாடைக்குச் செல்வாக்கு அதிகம் உண்டு; ஆனல் அவர் தேசிய நோக்கம் கொண்டவர்; இந்தியச் சட்டமறுப்பியக்கத்திற் பங்குபற்றிச் சிறைத் தண்டனையும் அநுபவித்தவர் மிஸ்டர் அலுவிகாரை எனவே, அவரைக்காந்திச்சாமி என்று மாத்தளைப்பகுதிவாசிகள் அழைப்பார்கள்.

சென்ற திங்கட்கிழமை இப்பகுதித் தேர்தல் முற்று அறிவிக்கப்பட்டது மிஸ்டர் அலுவிகாரை 10000 வாக்குச் சம்மதங்களினல் வெற்றியுற்றார் உடனே அவரை ஊர்வலமாய் அழைத்துச் செல்ல முயற்சி செய்யப்படுகையில் மிஸ்டர் கரியலாடையின் காரில் இருந்த ஒருவன் துப்பாக்கியினல் ஜனக்கும்பலை நோக்கிச் சுட்டான்.

இதன்பயனுக ஐவர் உடனே மரணம் அடைந்தனர். இந்த ஐவரும் வேடிக்கை பார்க்கவந்த பத்துவயதுப் பையனும் ஐரும் மிஸ்டர் அலுவிகாரைக்குஞ் சூடு ஒன்று அவர் தலையின் பிற்பக்கத்திற் பட்டது. உடனே அவர் ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அங்கே அவர்க்குச் சத்திரவைத்தியம் செய்து ரணத்தில் இருந்து குண்டு எடுக்கப்பட்டது.

இந்த அக்கிரமத்தைச் செய்தவன் மிஸ்டர் கரியலாடையின் மோட்டார்ச் சாரதியான P. B. கண்டகதிர என்பவனும். இவனை ஜனங்கள் வெளியே இழுத்து கசித்துக் கொல்லப்போகும் சமையத்தில் பொலிசாரால் சிறையாக்கப்பட்டான். இன்னும் சிறையாக்கப்பட்டிருக்கின்றனர்.

மிஸ்டர் அலுவிகாரை இப்போது குணமடைந்து வருகின்றார். திங்கட்கிழமை நிகழ்ந்த விசாரணையில் அவர் தமது சாட்சியத்தைக் கொடுத்தார்.

### கள்ள நோட்டுக்கள் செய்வோர்.

இலங்கையிலே கள்ள நோட்டுகள் உண்டாக்கி, அவற்றை உண்மை நாணயம் எனப் பாமர ஜனங்களை ஏமாற்றித்திரியும் போவழிகளை அகப்படுத்தி அவர்களின் கிருத்திரமத்தை அடக்குதற்குப் பொலிசார் கங்கணங்கட்டிக் கர்மம் ஆற்றி வருகின்றனர்.


## நாட்டுப் பொருள் அபிவிருத்தி.

[ வரையுளது ]

மூலதனம் ரூபா 30,000.

100 ரூபாகொண்ட 300 பங்குகள் உடையது.

பிரதான நோக்கமாகிய நெற்செய்கை
கரைச்சி நீர்ப்பாசசநப்பகுதிகளில் நடந்துவருகிறது.
பங்கு ஒன்றுக்கு ரூபா 10 விகிதம் பத்துமாதங்களில் கொடுக்கலாம்.
பங்குத்தொகை மொத்தமாகக் கொடுப்பவருக்கு நூற்றுக்கு ஐந்து கழிவு
நீர்ப்பாசசநப்பகுதி வேளாண்மை ஈனேற வருவாய் ஏதிவருவது தெளிவாயிற்று

**அதிக ஆதாயந் தருவது!    பங்குக்கு முந்துங்கள்!!**

யாழ்ப்பாணம் திருநெல்வேலி வ. சோமசுந்தரம்
,, சந்தரோடை வித்தியாசாலை மனேச்சர் சி. சந்தையா
,, நல்லூர் ஆசிரியர் வி. முத்துக்குமாரு M. A.

ஆகியோரிடம் பங்குகள் பெறலாம்.

**ஆரம்ப கருத்தாக்கள்:—**

Dr சி. சுப்பிரமணியம் Retired Prov. Surgeon.
R. R. நல்லையா J. P. யா. ந. ச. தலைவர்.
சி. முத்துவேலு J. P. கொக்குவில் கிராமச்சங்கத் தலைவர்.
K. தம்பிப்பிள்ளை வித்தியாசாலை மனேச்சர் காங்கேயன் துறை.
ஆ. மாணிக்கம் விஞ்ஞான சாஸ்திர ஆசிரியர், ஸ்கந்தவரோதயக் கல்லூரி சுந்தரோடை.

(H 192. 6-11-35 to 5-5-36    (வி)



## திருநெல்வேலி ஒற்றுமை நிதி,

( வரையுளது )

அதிகாரம் பெற்ற மூலதனம் ரூபா **500,000.**
ஒன்று 25சதமாக 80 மாதங்கள் செலுத்திருபா
25ம்ஆதாயமும்பெறலாம்
தனிகத்தொழிலும் உணவுப்பொருள் வியாபாரமும்
திருநெல்வேலியில் இலாபகரமாய் நடக்கின்றன.
வேண்டிய இடங்களில் கிளை ஸ்தாபனங்கள் திறக்கப்பெறும்.
தேசிய கருமங்களை வளர்ப்பதால் சுயேச்சைபெற முடியும். ஆதலால்,
முதலை வளர்த்து வேலையளித்து, கைத்தொழிலை உயிர்ப்பிக்கும்
நோக்கங்கொண்ட இந்நிதியை ஆதரியுங்கள்!
இலகுவான முறையில் இறுக்கக்கூடிய கடன்கள் கொடுக்கிறோம்.
உயர்ந்த வட்டி விகிதங்களோடு தவணைக்கும்
நிபந்தமாயும்,சம் பாத்தியத்திலும், நடைக்கணக்கிலும்
பணம் ஏற்றுக்கொள்ளுவோம்.

பங்குகளுக்கு முந்துங்கள்!!
கைராட்டினத்தில் நூற்ற நூலும், கைத்தொழில் பொருளும்
சந்தாவுக்கு ஏற்றுக்கொள்ளுவோம்.

வ. சோமசுந்தரம்,
காரியாதிகாரி.

(Y. 189. 1-11-35 to 31-10-36.)    வி.


### துன்னாலை வடக்கு அல்லையம்பதி சுப்பிரமணியசுவாமி கோயில்.

நிகழும் யுவவருடம் மாசிமீ 4-ந் தேதி (16-2-36) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 30 மணிக்கு மேடிகோவிலின் கிழக்கு வாசல் வீதியிலே கோயிற் போஷகர்களின் கூட்டமொன்று கூட்டப்பட்டது.

அக்கருணம் கோயிலுத்தியோகத்தர்களும், கோயிலதிகார நியமன உறுதி முடிப்புக்காரருமாகிய வணக்க உரித்தாளர் சுமார் 70—80 பேருடையோர் சமுகமளித்தனர்.

தேவாரபாராயணத்தோடு கூட்டமாரம்பமானது.

அக் கூட்டத்துக்கு கனம் ஸ்ரீ பரமர் கணபதிப்பிள்ளையைச் சபைத்தலைவராகவும் ஸ்ரீ வீரகத்தியார் முருகேசுவை விகிதாரகவும் நியமனஞ் செய்தார்கள் கோயிலதிகார நியமனப்பத்திரப்படிக்கு நியமனஞ் செய்த பத்திரமுடிப்புக் காரரில் காலஞ்சென்ற (12) பேர்வழி காரரினிடங்களுக்கு அவ்வவ்வுரிமைக்காரர் போஷகர்களாகக் கடமை செய்ய முன் வந்த 12 பேர் நியமனஞ் செய்யப்பட்டார்கள். பின்னர் மேற்சொல்லிய சாதனத்திற்கு குறித்த தானிகர்கள் வே வைரவிப்பிள்ளை, க. வேலப்பர், க. சின்னத்தம்பி, பு வல்லியப்பர் ஆகிய காலஞ்சென்ற நால்வரினிடங்களுக்கு முறையே: (1) முருகேசு பழனியையும், (2) முருகர் சின்னத்தம்பியையும் (3) வீரகத்தியார் பரமசாமியையும், (4) சின்னத்தம்பியார் கோணமலையையும் நியமனஞ்செய்யப்பெற்றது

முன் நியமனஞ் செய்யப்பெற்ற தானிகர்களிற் காலஞ்சென்றவர்கள் தவிர, உயிரோடிருப்பவர்கள்: ஆறுமுகத்தையாவும், வ. மயில்வாகனமும் கோயிற் கடமைகளை மற்றையோரோடு கூடிப் பார்ப்பதற்கு முன் வாராதிருப்பதால் அவ்விருவரினிடங்களுக்கும் முறையே: பரமர் கதிர்காமப்பரையும், வே. ஆள்வாரையும் தானிகர்களாக நியமிக்கப்பட்டது:

1936-ம் ஆண்டு தைமீ 28உ 14513ம் இலக்கத்தில் வ. கணபதிப்பிள்ளை நொத்தாரிஸ் சமுகத்தில் தானிகர்கள் ஆறுபேரும் பரமானந்தப்பருக்கு முடித்துக் கொடுத்த குத்தகை உறுதியும் சரியெனத் தீர்மானஞ் செய்யப்பட்டது

புதிதாக நியமனஞ் செய்யப்பட்ட தானிகர் சின்னத்தம்பியார் கோணமலை உத்தியோகத்தினின்றும் விலகிக்கொள்ள விரும்பியபடியால் சி. வீரகத்தியார் முருகேசுவை அவரிடத்துக்கு நியமனஞ்செய்யப்பட்டது.

கோயில் வாய்தலில் 4-20 மணிக்குத் தொடங்கிய கூட்டம் கோயிலாராதனைக்கு இடையூறுவாரவண்ணம கிழக்கு வீதியிலுள்ள திருநீலகண்டத் தொண்டர் மடத்தில் மாலை 6-30 மணிக்குக் கொண்டுபோகப்பட்டு தீர்மானங்கள் முடிவுசெய்துகொண்டபின் 9–30 மணியளவில் தேவாரபாராயணத்தோடு கூட்டம் முடிவுபெற்றது.

கோயிற்கருமங்களை மற்றவர்களுடன் சேர்ந்து நடத்தமுன் வராது நோவில் மணியகாரன் வேலப்பர் வேலக்குட்டியும் அவரைத் தொட்டு நிற்கும் சிலரும் இவ்விடயத்தில் வாளாவிருப்பது எவரும் விசனிக்கத் தக்கதே

இனியேனுமெல்லோரு மொற்றுமைப்பட்டு இப்பதிபுண்ணியங்களைச் செய்துய்யும்படிக்கு எல்லாம் வல்ல இறைவன் திருவருள் புரிவாராக?

இங்ஙனம்,
தா. முருகேசன்
ஆலயவிகிதன்

17-2-36.

### மட்டக்களப்புச் சுப்பிறீம்கோடு.

மட்டக்களப்புப் பகுதியில் சுப்பிறீம்கோட்டு விசாரணைக்கு ஒரேஒரு வழக்கு இருப்பதால் அவ்விடத்தில் இம்முறை சுப்பிறீம்கோட்டு விசாரணை நடைபெறாது எனத் தெரிய வருகின்றது. மேடி ஒரு வழக்கும் யாழ்ப்பாணம் சுப்பிறீம் கோட்டிலேயே விசாரணை செய்யப்படும் என்று அறியக் கிடக்கின்றது.


## அடைவுநகை விற்பனைவு விளம்பரம்.

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின்படி லைசென்சு பெற்று அடைவு பிடிக்கும் யாழ்ப்பாணம் வண்ணிழக்கு மு. ராம. மு. சே. சேவகஞ்செட்டியார் என்பவரிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணை தப்பி அச்சட்டத்தின் 12ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கவேண்டிய நகைகளின் விபரம்.

1934 ஆ. ஆகஸ்ட் மீ

| நம்பர் | திகதி | ரூ | பெயர் நகைவிபரம் |
| --- | --- | --- | --- |
| 15522 | 4 | 100 | கந்தர்மடம் வே. தம்பையா இமி கடுக்கேர் 1 |
| 15524 | 4 | 8 | வண்ணிழக்கு நா. சபாபதிப்பிள்ளை இறு நாட்டுக் கடுக்கன் சோடி 1 |
| 15627 | 9 | 90 | புத்தூர் செ. மாணிக்கவாசகர் சிங்கமுகக் காப்பு சோடி 1 கொறுக சோடி 1 |
| 15656 | 11 | 65 | ஆரியகுளம் அ. ஆறுமுகம் கொக்கில்லாத சங்கிலி 1 |
| 15389 | 18 | 12 | தொல்புரம் க. நவரத்தினம் ஒற்றை மோதிரம் 1 கௌவர்மோதிரம் 1 |
| 15865 | 22 | 15 | உடுவில் வை. தம்பையா இமி தோடுசோடி 1 |
| 15867 | 22 | 15 | ஆயக்கால் நா சதாசிவக்குருக்கள் இமி சிலக்கல் மோதிரம் 1 கடுவென்னகைகல் கடுக்கன் சோடி 1 |
| 15921 | 24 | 21 | களிபுரம் சி. கணபதிப்பிள்ளை கெப்புக்கல் தோடு சோடி 1 |
| 15955 | 26 | 145 | சுன்னாகம் ம. சின்னத்தம்பி இமி பலர் 1 சாதா சங்கிலி 1 இமி மோதிரம் 1 புலிநகம் 1 |
| 15958 | 26 | 180 | காலடி வை பொன்னையா குண்டு இரண்டுடன் தாலிமுதிச்சக்குதகிக் [சோடி 1 |
| 15969 | 26 | 20 | கச்சேரியடி சி. அந்தோனிப்பிள்ளை இமி செட்டின் 1 |
| 15980 | 27 | 12 | கனுபிட்டி நா. காசிப்பிள்ளை இமிகல் தோடு சோடி 1 |
| 15993 | 27 | 27 | கோப்பாய் மு. கனகரத்தினம் கம்பிக்காப்பு சோடி 1 |
| 16047 | 30 | 15 | சுன்னாகம் மு. துரைச்சாமி இ. மி. பதக்கம் 1 |
| 16070 | 31 | 9 | உரும்பராய் அ. துரையப்பா இமிதோடு சோடி 1 |
| | | | 1934 ஆ. செப்டம்பர் மீ |
| 16107 | 2 | 50 | சுன்னாகட்டி ரு. நாகலிங்கம்பிள்ளை கொப்பு சோடி1 கரும்புக்கொப்புசோடி 1 |
| 16108 | 2 | 6 | சங்குவேலி க. திருஞானசம்பந்தர் இறுகெட்டி மோதிரம் 1 |
| 16185 | 5 | 150 | கொக்குவில் வே. குணரத்தினம் இமி முகப்புடன் செட்டிக்கொறுசோடி |
| 16197 | 5 | 120 | திருக்கோணமலை பொ. வயகதீஸ்வரக் குருக்கள் ஒன்றுக்கு சாதா டிம்மியுடன் சம்பிப்பூரான் அட்டியல் 2 |
| 16253 | 8 | 32 | நவாலி சு. நவரத்தினம் விலாசம் போட்ட மோதிரம் 1 |
| 16504 | 18 | 10 | சேணியதெரு ஆ. சோமு K. S. விலாசம் போட்ட மோதிரம் 1 |
| 16515 | 18 | 51 | பறங்கிதெரு கா. ராமசாமி அரலை கோர்த்த சங்கிலி 1 |
| 16530 | 18 | 10 | சோனகதெரு ம. பெரியதம்பி இமி சிலக்கல மோதிரம் 1 |
| 16569 | 19 | 15 | நவாலி கா. சின்னத்தம்பி கொக்கி இல்லாத குணடுச் சங்கிலி 1 |
| 16579 | 20 | 11 | மாதகல் அ. சிவியம இமி தோடு சோடி 1 |
| 16654 | 23 | 10 | சுதுமலை நே. பி. ஐயம்பா செடி வேலைசெய்த அரைப்பவுண் 1 |
| 16656 | 23 | 10 | கோண்டாவில் சி. அருணசலம் இமி நீலக்கல் மோதிரம் 1 |
| | | | 1934 ஆ. அக்டோபர் மீ |
| 16831 | 1 | 12 | இணுவில் கு. ராமசாமி ஐயர் பாம்பு மோதிரம் 1 |
| 16938 | 6 | 16 | கந்தர்மடம் வே. தம்பையா அச்சரக் கூடு 1 |
| 17156 | 14 | 10 | நவாலி சு சின்னத்தங்கம் இமி டிம்மி இல்லாத பதக்கம் 1 |
| 17192 | 16 | 6 | உரும்பிராய் ச. சின்னத்தம்பி இமி மோதிரம் 1 |
| 17211 | 17 | 18 | சண்டிக்குளி ராம. வேலு முருக்க மோதிரம் 1 |
| 17270 | 20 | 65 | ஆரியகுளம் அ. ஆறுமுகம் அருணக்கொடி 1 |
| 17272 | 20 | 50 | ஆரியகுளம் அ. ஆறுமுகம் அருணக்கொடி 1 |
| 17310 | 21 | 10 | வண்ணிழக்கு அ. நாகமுத்து புலிநகம் 2 கல்வாளி சோடி 1 குச்சசோடி 1 ஆடுதன் மோதிரம் 1 |
| 17329 | 21 | 7 | மண்டதீவு சி. கார்த்திகேசு மனுக்கன் கல் காதோலை சோடி 1 |
| 17342 | 22 | 14 | வண்ணிழக்கு சி. ஆறுமுகம் S மோதிரம் 1 தோடு சோடி 1 |
| 17522 | 31 | 13 | மாகியப்பிட்டி சி. செல்லையா அச்சரக் கூடு 1 |
| | | | 1934 ஆ. நவம்பர் மீ |
| 17555 | 2 | 12 | சண்டிக்குளி ராமவேலு முறுக்குக்காப்பு 1 |
| 17749 | 8 | 300 | நயினாதீவு நா. ஐயாத்துரைக் குருக்கள் முருச்சக்குத்திக் கொடி 1 |
| 17802 | 10 | 13 | ஆனைக்கோட்டை மு. சபாபதி கௌவர் மோதிரம் 1 |
| 17859 | 13 | 14 | வண்ணிழக்கு நா. சபாபதி பிள்ளை பின் கோர்ச்சி 1 |
| 17860 | 13 | 14 | வண்ணிழக்கு நா. சபாபதிப்பிள்ளை நாட்டுக் கடுக்கன் சோடி 1 |
| 17884 | 14 | 8 | இணுவில் நா. கிருஷ்ணசாமி இமி தோடு சோடி 1 |
| 17895 | 14 | 40 | வண்மேற்கு நா. பசுபதிசெட்டியார் மனுக்கன் கல் பதக்கம் 1 |
| 17987 | 19 | 11 | மானிப்பாய் த. இராசரெத்தினம் கல்லில்லாத மோதிரம் 1 |
| 18095 | 24 | 9 | சங்கானை வ. செல்லையா இமி காதோலை சோடி 1 |
| 18153 | 27 | 85 | பிரப்பங்குளம் க. சோமசுந்தரம் சங்கிலி 1 |
| 18184 | 29 | 60 | ஆனைப்பந்தியடி சி. சொறணம் மோதிரம் 3 செட்டின் 1 குண்டுவைத்த காசு 1 |
| 18190 | 29 | 75 | சண்டிக்குளி ராம வேலு சங்கிலி 1 |

விற்பனவு:—யுவ ஞு பங்குனி மீ 2ம் திகதிக்குச் சரியான (14 3-36) சனிக்கிழமை 10 மணி தொடக்கம் எடுக்கப்பட்ட நகை பிறநீங்கலாக மிகுதி மேற்படியாரிடத்தில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

சி. ஐயம்பிள்ளை உடையார்.
லெக்சின் மேன்சர்

(Mis 281. 27 & 2-3-36)



## N.வைத்திலிங்கம் & கம்பெனி

பெரியகடைத்தெரு,யாழ்ப்பாணம்

கட்டிடங்களுக்குவேண்டிய முதல்தரமானசாமான்கள்
ஜெர்மனி, ஜப்பான், டச்சு
முதலியவிடங்களிற்செய்யப்பட்ட உத்தரவாதமுள்ள
சீமெந்துவகைகள், இரும்புச் சாமான்கள்
வர்ணங்கள், வார்ணிஸ், கொழுக்கி ஓடுகள்
இன்னும் கட்டிடத்திற்குரிய சகல சாமான்களும்
எப்பொழுதும் விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன.
கட்டிட வேலைகளைப்பற்றி எங்களிடம் யோசித்தால்
சகாயமும் சௌகரியமும் கிடைக்கும்.

HEAD OFFICE:
38, 3rd Cross Street,
Colombo.    Telephone No. 30.

(Y. 56. 8-2—7-2-36)    வி


"மகன்றந்தைக் காற்று முதவி யிவன்றந்தை
என்னேற்றான் கொல்லெனுஞ் சொல்."

# கொய்லன் வங்கி (லிமிற்றெட்)

(1919-ம் ஆண்டு
திருவாங்கூரிற் பதிவுசெய்யப்பட்டது)

## யாழ்ப்பாணம்.

காலங் குறிக்கப்பட்ட வைப்புப்பணம்
( FIXED DEPOSITS )

எங்கள் வங்கியில் க்ஷேமிக்கும்படி தரப்படும் வைப்புப்பணத்திற்குப் பின்வரும் விகிதமான வட்டி கொடுக்க நிர்ணயஞ் செய்திருக்கிறேம்.

| | |
|---|---|
| 6 மாச காலம் | 3½ விகிதம் |
| 12 மாச காலம் | 4½ விகிதம் |
| 24 மாச காலம் | 5 விகிதம் |

ஏனைய விபரங்களை எங்களிடம் விஞ்ஞயறிந்துகொள்ளலாம்.

**V. C. ஓமன் B. A.**
யாழ்ப்பாண ஏஜன்ற்

Y. 71 23-5 to. 22-5-36



கோடைகாலத்திற் பீடிக்கும்
தலைவலியைத் தடுப்பதற்காக
ஒரு போத்தல்

# லிட்டில்ஸ் ஓரியண்டல்பாம்

## தைலத்தை

வாங்கி வைத்திருங்கள்

இந்தியாவில் சிறந்ததும் முதன்மையானதும்

இதுவே.

Y 53. 1-1—31-12-36)



# மருந்துச் சரக்குகளின் விளம்பரம்

இத்தாற் சகல வைத்தியர்க்கும், மருந்துச்சரக்கு வியாபாரிகட்கும் தெரிவிப்பதாவது:—இப்போது பெரியகடை மார்க்கட்டுக்கு வடக்குப் பக்கத்திலிருக்கும் சே. சிவக்கொழுந்து அவர்களின் மருந்துச்சரக்குக் கடையிலும், நல்லூர்வடக்குச் சட்டநாதர் கோயிலடியிலிருக்கும் மேற்படியாரின் மருந்துச்சரக்குக் கடையிலும், கஸ்தூரி. கோரோசனை, குங்குமப்பூ. காண்டாமிருகக்கொம்பு, சுத்தமான சிப்பி முத்தும் அடியிற் குறிப்பிட்டிருக்கும் விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.

| | களஞ்சு ஒன்றுக்கு | தோலா ஒன்றுக்கு |
|---|---|---|
| 1-ம் நம்பர் கஸ்தூரி | 20—00 | 40—00 |
| ,, கோரோசனை | 3—00 | 7—30 |
| ,, குங்குமப்பூ | —50 | 1—20 |
| ,, முத்து | 14—00 | 32—50 |

1- நம். காண்டாமிருகக் கொம்பு களஞ்சுஒன்றுக்கு சதம்—50
ருத்தல் ஒன்றுக்கு ரூபா 40

மேலே சொல்லப்பட்ட சரக்குகள் எல்லாம் முதல்தரமான நல்ல சரக்குகளே; எங்களிடம் நேரில் வந்து பார்த்துக்கொள்ளலாம். இன்னும் சுருள் தங்கம், புனுகு, பச்சைக்கற்பூரம், ஜவ்வாது, அரைத்த சந்தனம், சந்தணக்கட்டை, சந்தணவில்லை சாம்பிராணி பதங்கம், தைலம், முதலியவைகளும், சென்ற், அத்தர் முதலிய வாசனைத் திரவியங்களும், திறமான பன்னீர் வகைகளும், அபிஷேகத் திரவியங்களும் ஓமவாட்டர், சுருட்டுக் கோடாச் சரக்குகளைகளும் பலவிதமான திறம் ஊதிவத்திகளும், மற்றும் மருந்துச்சரக்கு வகைகளும் தொகைக்கும் சில்லறைக்கும் சரசமான விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.

தஞ்சாவூர், மு. ஆபிரகாம் பண்டிதர் அவர்களின் சஞ்சீவி மருந்து வகைகளும், திருசசி டக்டர் A. மதுரம் அவர்களின் குரு மருந்து வகைகளும், யாழ்ப்பாணம், டக்டர் ஜே வஸ்தியாம்பிள்ளை அவர்களின் மருந்து வகைகளும் இவ்விடத்திற் பெற்றுக் கொள்ளலாம்.

வீ. பீ. மூலம் பெறவிரும்புவோர், நான்கிலொருபாகத்தை முன் பணமாக அனுப்ப வேண்டும். தொடுவாய்ப் பகுதிகளுக்கு முழுவதும் முற்பணமே அனுப்பவேண்டும்.

தபால், மணிஆடர் அனுப்பும் விலாசம்,

**ஆ. இராசையா,**
சே. சிவக்கொழுந்து அவர்கள்ன் மருந்துச் சரக்குக் கடை
பெரியகடைத்தெரு, யாழ்ப்பாணம்.

Q. 240 1-1-36 to 31-3-36.



## விளம்பர விகிதம்.

வியாபாரத்தை விருத்தி செய்யவேண்டில் இந்துசாதனப் பிரசுரங்களில் விளம்பரஞ் செய்க.

| | | | |
|---|---|---|---|
| 1 | பந்தி (கலம்) | ரூபா | 10.00 |
| ½ | ,, ,, | ,, | 5-50 |
| ¼ | ,, ,, | ,, | 3-00 |
| 1 | அங்குலம் | ,, | 1-00 |

அடுத்த பிரசுரங்களிற் பாதி விகிதம்.

காலம் நீடித்த விளம்பரங்கள், விசேஷ விளம்பரங்கள் விஷயத்தில் மனேஜரிடம் நேரிற் கண்டேனும் எழுத்துமூலமாகவேனும் ஒழுங்கு செய்யலாகும். உடன்பணம் அனுப்பப்படா விளம்பரங்கள் ஏற்கப்படமாட்டா.

மானேஜர்
சைவப்பிரகாசயந்திரசாலை.



## சால்மிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பலவியாதிகளைக்குணப்படுத்துவதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுபத்திரங்களும் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில்உலக நன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப் பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, சலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பீதானு,சாலா முஸ்லி, சப்பேமுத்ஸலி பிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதம் பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளி விதை, நாகப்பூ, வங்கபஸ்பம், அரசபஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்தசெந்தூரம், சாம்பிராணிபதங்கம் இன்னும், அநேகபுஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்திற்குள் உண்டாயிருக்கும் பக்கவாயு, இருமல், காசம், பித்தகாமாலை,பித்தபாண்டு. பீனிசம், கைகால்காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாயு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்தலேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் குணமடைவதுடன் ருதுவாய்வு, பிரசவஅறையில் உண்டாகும் நோய்கள்தீர்ந்து தேகபுஷ்டியும்பலமும் பெறுவார்கள். பால்விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை ருத்தல் ஒன்றுக்கு ரூபா உ0. அரை ருத்தலுக்கு ரூபா பத்து. கால் ருத்தலுக்கு ரூபா ரு. தபாற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர்பினாங்கு முதலிய தொடுவாயிராச்சியப் பகுதிக்கு வீ. பீ. சட்டம் இல்லாததனால் முன் மணிஆடர் அனுப்புதல்வேண்டும்.

இங்ஙனம்,
**க. ஆறுமுகம்பிள்ளை,**
சிவஞான ஆரோக்கிய சுகாதார வைத்தியசாலை,
காத்தான்குடி போஸ்று,
மட்டக்களப்பு
Y55 1-1-34 to 31-12-36) சிலோன்.



## முக்கிய அறிவித்தல்.

அரசாங்க சபைப் பொதுத் தேர்தல் சம்பந்தமான கூட்ட விவரங்கள், அறிவித்தல்கள் யாவும் இப் பத்திரிகையில் விளம்பரமாகவே பிரசுரிக்கப்படும். இவ் விளம்பரங்களுக்கான விகிதம் வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| ஒருமுறைக்கு | ஒருபந்தி (கலம்) | ரு. | 10-00, |
| ,, | அரைப்பந்தி | ,, | 5-50. |
| ,, | கால் பந்தி | ,, | 3-00. |
| ,, | 1 அங்குலம். | | -75. |

விளம்பரக் கிரயம் முற்பணமாகவே இறுக்கப்படல்வேண்டும். இவ் விளம்பரங்கள் மானேஜருக்கே அனுப்பப்படல் வேண்டும்.

மானேஜர்
இந்துசாதனம்,



"இரதி மன்மத"
# சுகானந்த லேகியம்.

க்ஷயம் - ஸ்வாஸகாஸம் - மேகம் - குன்மம் முதலிய கொடூரமான வியாதிகளையும், வீரியஅழிவு, மலபந்தம், அஜீர்ணம், சரீரமெலிவு, மூளைஎரிச்சல் முதலிய சர்வவியாதிகளையும் போக்கி, இரத்தத்தை விருத்திப்படுத்தி, ஆண்மையூட்டி கிழவர்களுக்கும் கூட யௌவனத்தை உண்டுபண்ணிச் சுகமனுபவிக்கச்செய்வதில், இதற்கு நிகரான "சித்த" ஔஷதம் வேறுகிடையாது:—

ஓர் முறை பரீக்ஷியுங்கள்.

பூரணசுகத்திற்குப் போதுமான 40 நாட்கள் சாப்பிடக்கூடிய ஔஷதத்தின் விலை ரூபா } 4 00
தபால்சார்ஜ வேறு.

N. B. முழுவிவரங்களடங்கிய "ஔஷத பூஷணம்" வேண்டுபவர்களுக்கு இனமாக அனுப்பப்படும்.

விலாசம்:—
மலையாள **"சித்த" ஔஷதாஸ்ரமம்,**
2 மெயின்றேட்,
கோல்லம், **Quilon S. India.**

H 208. 1-12-35 to 31-5 36



திறம் தேக்கமரம் — பவுண்மார்க் கோளுக்கி ஓடு.

மிகத்தொகையாக இப்பொழுது வந்திருக்கின்றன.
சியம் தேக்கமரங்கள் ரூபா 2-60சதந் தொடக்கம்
றங்கூன் தேக்கமரங்கள் ரூபா 2-75சதந் தொடக்கம்

## இன்னொரு பிரதான விளம்பரம்.

நாங்கள் எங்கள் காசுக்கடையில், ஈடுபிடிக்கும் நகைகள் விஷயத்தில் 100 ரூபாவிற்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் இதுவரையிலிருந்த 12 விகித வட்டியைத் தவிர்த்து 9 விகிதமாகக் குறைத்துக்கொண்டோம் என்பதாம்.

திறமான பொருள், நேர்மையான வியாபாரம் சகாயமான விலை இவைகளில் எங்கள் கடையே பேர் பெற்றது.

பவுண் "மார்க்" ஓடுகள் விசேஷமானவை

**சி. வீரகத்திப்பிள்ளை** அண்டு சன்ஸ்
(Y 57. 1.5-35to30-4-36.) பெரியகடைத்தெரு, பாங்ஷல் வீதி.



## பத்திரக் கிரயம்.

( முற்பணமாக அனுப்புதல் வேண்டும். )

| யாழ்ப்பாணப் பட்டினம் | தமிழ் | ஆங்கிலம் | இருபிரதிகளும். |
|---|---|---|---|
| | ரு. ச. | ரு. ச. | ரு. ச. |
| (நகரசங்க எல்லைக்குட்பட) | | | |
| ஒருவருடத்திற்கு | 5 - 00 | 5 - 00 | 9 - 00 |
| ½ வருடத்திற்கு | 3 - 00 | 3 - 00 | 5 - 00 |
| ¼ வருடத்திற்கு | 2 - 00 | 2 - 00 | 3 - 75 |
| இலங்கை இந்தியா | | | |
| ஒருவருடத்திற்கு | 8 - 00 | 8 - 00 | 12 - 00 |
| ½ வருடத்திற்கு | 4 - 50 | 4 - 50 | 7 - 00 |
| ¼ வருடத்திற்கு | 2 - 50 | 2 - 50. | 4 - 50 |
| சிங்கப்பூர் முதலிய அந்நிய நாடுகள் | | | |
| ஒருவருடத்திற்கு | 9 - 00 | 9 - 00 | 13 - 00 |
| ½ வருடத்திற்கு | 5 - 00 | 5 - 00 | 7 - 50 |
| ¼ வருடத்திற்கு | 3 - 00 | 3 - 00 | 5 - 00 |

தனிப்பிரதி சதம் 5

கொழும்பு தனிப்பிரதிநிதி:-
ப. மு. ரா. முத்துச்சாமி செட்டியார்,
"நியூஸ்மார்ட்"
89. கோவில்தெரு,
குப்பனித்தெரு.


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம்வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by S. ADCHALINGAM, residing at Vannarponnai West Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai, Jaffna at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Thursday, 27th February 1936